விலை சதம் 5

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

முதலாம் பதிப்பு

சுதந்திரன்
THE "SUTANTIRAN."
(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.
இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும்
சுதந்திரத்திற்காக வெளிவருவது.

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா ,, 12-00
1 வருடச் சந்தா ,, 24-00
மானேஜர்
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411
நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து வருடம் கார்த்திகை மீ 19உ வியாழக்கிழமை Colombo. December, 4 1947 — ஹிஜ்ரி 1367 முஹர்ரம் பிறை 20 | இதழ் 184

பூரண சுதந்திரமல்ல, போலிச் சுதந்திரமே!

பணக்காரக் கும்பல் பாமர மக்களை நசுக்கவே பாதுகாப்பு ஒப்பந்தம்

பரிபூரண சுதந்திரத்தை மறுக்கும் இலங்கை சுதந்திர மசோதாவும் ஒப்பந்தங்களும்

எதிர்கட்சியின்திருத்தப்பிரேரணை

30 வருட காலம் அரசாங்க ஊழியர் நடத்திய சுதந்திரப் போராட்டம்

—(திரு கே. கனகரத்னம்)

ஆசியாவிலிருந்து மூட்டைகட்டி வெளியேறும் பிரிட்டனுக்கு இலங்கையில் இடமேன்?

—(திரு. வி. குமாரசாமி)

இந்தியர் வெளியேற வேண்டுமென்று கூறிய வாரியப்பொல பிரதிநிதிக்கு திரு. சுப்பையாவின் சூடு

கொழும்பு, டிச. 3

நேற்று பகல் ஒரு மணிக்கு பிரதிநிதிகள் சபை மீண்டும் கூடியபோது இலங்கை சுதந்திர மசோதா பற்றி பிரதம மந்திரி கொண்டுவந்த தீர்மானத்தின் மீது தொடர்ந்து விவாதம் நடைபெற்றது.

எதிர்க் கட்சியின் சார்பாக டாக்டர் என். எம். பெரேரா கீழ்கண்ட திருத்தப் பிரேரணையைப் பிரரேபித்தார்:-

"இலங்கை மக்கள் பல வருடங்களாக அந்நியஆட்சியில் இருந்து விடுதலை பெறுவதற்காக நடத்திய போராட்டத்திற்குப் பின் இலங்கை சுதந்திர மசோதாவுக்குட்பட்ட இந்த சுதந்திரமாவது கிடைத்தது குறித்து இந்த சபை தனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது. ஆனால் இந்த மசோதாவும் இலங்கை அரசாங்கமும் பிரிட்டிஷ் அரசாங்கமும் சேர்ந்து முடிவு செய்துள்ள ஒப்பந்தங்களும் இலங்கை மக்களுக்கு பரிபூரண சுதந்திரத்தை மறுக்கக் கூடியதாக இருப்பதைக் குறித்து இந்த சபை வருந்துகிறது."

கொழும்பு, டிச. 3

பாராளுமன்றக் கூட்டம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் திரு ஏ. எப். மொலமுரே தலைமையில் நடைபெற்றது.

இது சுதந்திரமல்ல

சுதந்திர மசோதா பற்றிய விவாதம் தொடர்ந்து ஆரம்பித்தபோது திரு. ஜி. ஆர். மோத்தா பின்வருமாறு பேசினார்:-

இலங்கை, இந்தியா, பர்மா ஆகிய நாட்டு மக்களுக்கு "சுதந்திரம்" என்னும் சொல் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். ஆனால் அதன் உண்மையை அலசிப் பார்த்தால் "சுதந்திரம்" என்னும் சொல்லுக்கடியில் இலங்கை மக்களை அடிமையில் ஆழ்த்தும் தந்திரம் என்பது தெரியவரும். மேலும் அலசிப் பார்ப்போமானால் இலங்கையை பிரிட்டிஷ் அரசாங்கத்துக்காக பிரதம மந்திரியும் அவரது கட்சியினரும் ஆட்சி புரிந்து கொண்டிருப்பர் என்பது தெரியவரும். இலங்கை மக்களின் நிலைமையை கொழும்பு மத்திய தொகுதி அங்கத்தினர் திரு பீட்டர் கெனமன் தெளிவாக எடுத்துரைத்துவிட்டார்.

தொழிலாளருக்குதவுவோர் புரட்சிக்காரர்?

இன்று தொழிலாளர் பிரச்னையில் ஈடுபட்டு அவர்களுக்காக பாடுபடுவோரை புரட்சிக்காரர்களென்று பிரதம மந்திரியும் அவரது சகாக்களும் முடிவு செய்துவிடுகின்றனர். கடந்த காலங்களை முற்றாக அவர்கள் மறந்துவிட்டனர் என்றே தெரிகிறது.

சுதந்திர மசோதாவிலே "டொமினியன்" என்ற பதம் குறிக்கப்படவேயில்லை. இந்திய சுதந்திரச் சட்டத்தைப் பரிசீலனை செய்து பார்ப்பின் அங்கே "டொமினியன்" என்பது திடமாக குறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இந்திய டொமினியனும், பாகிஸ்தான் டொமினியனும் தங்கள் பாதுகாப்பு ஒப்பந்தங்களைச் செய்துகொள்ள முடியும்.

பரஸ்பர நலத்தைக் குறிப்பிடுவது யார்?

உடன்படிக்கைகளில் இலங்கையும் பிரிட்டனும் இரு நாடுகளும் பரஸ்பர நலன்களை பாதுகாக்க ஒருவருக்கொருவர் உதவி புரிந்துகொள்வது என குறிப்பிட்டுள்ளது. இரு நாடுகளுக்கிடையேயும் பரஸ்பர நலத்தைக் குறிப்பிடுவது யாரெனக் கேட்க விரும்புகிறேன். கடந்த நூறு வருடங்களுக்கு மேலாக இந்த பரஸ்பர நலன்களுக்காக உதவும் முறைகளில் எங்களுக்கு நல்ல பயிற்சி ஏற்பட்டுள்ளது. இலங்கையின் பாதுகாப்புக்கு அவசியம் வேறு ஒரு நாட்டின் உதவி தேவை என்பதை பிரதம மந்திரி தெளிவாகக் கூறியுள்ளார். இந்த முறையில் பிரதமர் மற்ற நாடுகளிலும்பார்க்க பிரிட்டிஷ் அரசாங்கத்தையே விரும்பியுள்ளார்.''

மேற்கொண்டு திரு. மோத்தா பேசுகையில் சபாநாயகர் அவருக்கு பேசுவதற்கென அனுமதிக்கப்பட்ட நேரம் முடிவடைந்துவிட்டதென்று கூறி அவரது பிரசங்கத்தைச் சுருக்கும்படி தெரிவித்தார்.

திரு பிரேமச் சந்திரா பேசுகையில், இலங்கை மக்களின் சுதந்திர விருப்பத்தைக் கண்டு பிரிட்டன் உண்மையிலேயே சுதந்திரத்தை வழங்கிவிட்டதாகவும் இந்த மசோதாவில் டொமினியன் என்னும் பதம் குறிக்கப்படாமைதான் முக்கியமாக விவாதத்துக்கிடமாக இருப்பதாகவும் அநேக காலகஷ்டங்களுக்குப்பின் இலங்கை சுதந்திரமடைவதில் தாம் சந்தோஷ படுவதாகவும் கூறினார்.

பேராசிரியர் பேக்மன்

பேராசிரியர் திரு எஸ். ஏ. பேக்மன் பேசுகையில், தமது வாழ்க்கையில் பாதிக்கு மேற்பட்ட காலத்தை தாம் இந்த அழகிய தீவிலேயே கழித்துவிட்டதாகவும் இலங்கையில் இன்றுள்ள ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தம்மிடம் கல்வி கற்றுள்ளனர் என்றும் அவிசாவளை தொகுதி அங்கத்தவரும் அவர்களில் ஒருவரென்றும் வெள்ளவத்தை-கல்கிசை தொகுதி அங்கத்தவர் தம்மிடம் சரித்திரம் கற்றவரென்றும் இலங்கை மக்களுக்குச் சுதந்திரம் கிடைத்தது தமக்கு சந்தோஷமேயென்றும் கூறினார். தொடர்ந்து பேசுகையில் டொமினியன் நாடுகள் அனுபவிக்கும் சுதந்திரத்தைப் போன்றதா இலங்கை சுதந்திரமும் என்பதுபற்றியே விவாதம் நடப்பதாகவும் டொமினியன் என்ற பதத்துக்கு ஒருவித முக்கியத்துவமுமில்லையென்றும் இந்த சுதந்திர மசோதாவும் உடன்படிக்கைகளும் இலங்கை மக்களுக்கு மற்ற டொமினியன்களுக்குள்ளது போன்ற சுதந்திரத்தையே அளிக்கின்றதா என்பதே விவாதிக்கப்பட வேண்டுமென்றும் கூறினார்.

பல விஷயங்களையும் விளக்கமாக எடுத்துக் கூறிவிட்டு, டொமினியன் என்னும் பதத்தைப்பற்றி சில சமயங்களில் எமக்கே சந்தேகங்கள் ஏற்படுவதென்றும் இலங்கை சுதந்திரம் பெறுவதாக குடியேற்ற நாட்டு மந்திரியே கூறியுள்ளாரென்றும் இலங்கைக்கு இந்த உடன்படிக்கைகளில் (பிரிட்டன்) இருந்து விலகிக்கொள்ளும் உரிமையுமுண்டென்றும், காமன்வெல்த் நாடுகளில் ஒன்றாக இருந்து பிரிட்டனுடன் சமமாக தொடர்புகளைக் கொண்டுள்ள நாடாகவே இருப்பதாகவும் கூறினார்.

சாவகச்சேரி தொகுதி அங்கத்தவர் திரு வி. குமாரசாமி பேசுகையில் கூறியதாவது:-

கொள்கைகளைப் பொறுத்தளவில் எத்தகைய கண்டனமும் பிழையாக விளங்கப்படமாட்டாதென நம்புகிறேன். பிரதம மந்திரி தமது பிரசங்கத்தில் பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகள் என்னும் ஸ்தாபனத்திலே இலங்கை அங்கத்துவம் வகிக்கப்போவதாக கூறியிருந்தார். பிரதமர் எங்களெல்லோரையும் "சுதந்திரம்" கிடைத்துவிட்டதென்று சொல்லி ஏமாற்றப் பார்க்கின்றார். காமன்வெல்த் நாடுகளின் ஸ்தாபனத்தில் அங்கத்துவம் வகிக்கப்போகின்றோமென்பது எங்களுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத்தரமாட்டாது. இலங்கை பாராளுமன்ற எதிர்க்கட்சி அங்கத்தினர் இச்சுதந்திர மசோதா மீது நடக்கும் விவாதத்துக்கு பிரதமர் தயாராக இருக்கவேண்டும்.

திரிகோணமலை விற்கப்படும்?

பேராசிரியர் பேக்மன் பேசுகையில் திரிகோணமலை, சிங்கப்பூர், சூயஸ் கால்வாய் ஆகிய இடங்கள் முக்கியத்துவம் வாய்ந்த தளங்களாக இருக்கமாட்டாவென்று குறிப்பிட்டார். பிரிட்டிஷார் திரிகோணமலையை ஆக்கிரமித்திருந்த காலத்தில் திரிகோணமலை முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருந்தது. ஆனால் இப்பொழுது அது முக்கியத்துவமுள்ள இடமெனக் கூறப்படவில்லை. திரிகோணமலையை பிரிட்டனுக்கு விற்கப் போகின்றார்கள் இதனை ஒரு மந்திரியே கூறியுள்ளார். இப்பொழுது அந்த மந்திரி எழுந்து இதனை ஆட்சேபிக்க முடியுமா?

இச்சமயத்தில் திரு வி. சுந்தரலிங்கம் (வர்த்தக மந்திரி) எழுந்து "இது முழுப்பொய்" என்று கூறினார்.

திரு குமாரசாமி தொடர்ந்து பேசுகையில் கட்டுப்பாட்டுத் திட்டங்களால் தேசத்திலுள்ள நிலைமைகளைப்பற்றியும் கட்டுப்பாட்டிலாக்காக்களில் லஞ்சம், ஊழல்கள் முதலியன மலிந்து கிடப்பதாகவும் இந்த இலாகாக்களில் உள்ள அதிகாரிகளுக்கு ஏதாவது கொடுத்து திருப்திபடுத்தினாலொழிய ஏழை மனிதர் ஒன்றும் பெற்றுக்கொள்ள முடியாதென்றும் இலங்கையிலுள்ள ஆஸ்பத்திரிகளின் நிலைமையும் குழப்பத்திலேயே இருப்பதாகவும் கூறினார். இச் சமயத்தில் சபாநாயகர், இந்த விபரங்களை பட்ஜெட் விவாதத்தின்போது உபயோகித்துக் கொள்ளும்படி கூறினார். தொடர்ந்து திரு குமாரசாமி பேசியதாவது:-

ஆசியாவை விட்டு பிரிட்டன் வெளியேறுகிறது

இன்று ஆசியாவைவிட்டு பிரிட்டன் வெளியேறவேண்டிய நிலைமை வந்துவிட்டது. முழு நிலைமையையும் பார்த்து அவர்கள் வெட்கப்படுகின்றனர். ஆசிய நாடுகளில் பிரிட்டனுக்கு இனிமேல் இடமில்லை பொதுவாக கிழக்கிலேயே பிரிட்டனுக்கு இடமில்லை. பிரிட்டன் இன்று எல்லா நாடுகளுக்கும் சுதந்திரங்களை வழங்குகின்றது. வெறும் உடன்படிக்கைகளின் அடிப்படையிலேதான் இவை நடக்கின்றன.

இலங்கை தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியாவிட்டால் வேறு என்ன செய்யப் போகிறது? பிரிட்டிஷ் இராணுவ ஆதிக்கத்திற்கு இலங்கை அடிபணியத்தான்வேண்டும்.

இலங்கை மக்களால் சோல்பரி அரசியல் திட்டம் ஏற்கப்படவில்லை. முன்னிருந்த அரசாங்க சபையின் தலைவர் திரு டி. எஸ். சேனநாயகா அதனை ஏற்றுக்கொள்வதற்கு மக்களிடமிருந்து அதிகாரத்தையும் பெறவில்லை.

இலங்கையிலுள்ள எல்லா மக்களும் இதனை நன்கு அலசிப் பார்க்கவேண்டும். இலங்கைமக்கள் தங்களை வேறு எந்த அந்நியநாட்டுடனும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பிணைத்துக்கொள்ளப்படாது.

திரு விக்டர் ரத்னாயகா பேசுகையில ஐக்கிய இலங்கையை சிருஷ்டிக்க எல்லோரும் ஒத்துழைக்கவேண்டிய நேரம் இதுதான என்று கூறினார்.

பிரிட்டனின்பலம் குறைந்துவிட்டது

திரு வீ. குணவர்தன பேசியதாவது:-

இரண்டாவது உலக யுத்தத்துடன் பிரிட்டனின்பலம் குறைந்துவிட்டது. பொருளாதாரத் துறையில் அமெரிக்கரால் பிரிட்டன் வீழ்த்தப்பட்டுவிட்டது. இப்பொழுது பிரிட்டன் தனக்கு ஏற்பட்டுள்ள ஆபத்துகளைச் சமாளிக்கும் நோக்குடன் சில அரசியல் கண்டிராக்ட் செய்து இந்நாட்டிலே தொடர்ந்து தனது சுரண்டல் நாடகத்தை நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்துகொண்டது.

பிரதம மந்திரி பகிரங்கமாகவும் இந்த பாராளுமன்றத்திலும் யூ. என். பி யின் நோக்கங்களைக் கூறிவிட்டார். இப்பொழுது பாதுகாப்பின்மையை நன்கு உணரக்கூடியதாக இருக்கிறது. இன்று பிரிட்டன் தான் ஒரு வல்லரசாக விளங்க முடியாதென்பதை உணர்ந்துகொண்டது. சிங்கப்பூர் வீழ்ச்சியடைந்ததைக் கொண்டு பிரிட்டனின் ராணுவ தந்திரங்கள் எல்லாம் பழைய கதையாகிவிட்டன.

மாலை நான்கு மணியானதால் தேனீர் இடைவேளைக்கு சபை ஒத்தி வைக்கப்பட்டது. தேனீர் இடைவேளைக்குப் பின் டாக்டர் என். எம். பேரேரா, சுதந்திரமசோதாவையிட்டு பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபையின் குதூகலத்தைத் தெரிவித்துக் கொள்ளுமாறு பிரதமர் கொண்டு வந்த தீர்மானத்தின் மீது ஒரு திருத்தப் பிரேரணையைக் கொண்டு வந்தார். திருத்தப் பிரேரணை வருமாறு:-

> இலங்கைமக்கள் பல வருடங்களாக அந்நிய ஆட்சியில் இருந்து விடுதலை பெறுவதற்காக நடத்திய போராட்டத்திற்குப் பின் இலங்கைசுதந்திரமசோதாவுக்குட்பட்ட இந்த சுதந்திரமாவது கிடைத்ததுகுறித்து இந்த சபை தனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது. ஆனால் இந்த மசோதாவும் இலங்கை அரசாங்கமும் பிரிட்டிஷ் அரசாங்கமும்சேர்ந்து முடிவு செய்துள்ள ஒப்பந்தங்களும் இலங்கை மக்களுக்கு பரிபூரண சுதந்திரத்தை மறுக்கக் கூடியதாக இருப்பதைக் குறித்து இந்தச் சபை வருந்துகிறது.

இத்திருத்த தீர்மானத்தைச் சபையில பிரரேபித்து டாக்டர் பேரேரா பேசியதாவது:-

இலங்கையின் பரிபூரண சுதந்திரத்துக்காகவே இலங்கை சமசமாஜக் கட்சி பாடுபட்டு வருகிறது. 1933-ம் வருடத்துக்கு முதல் தொடக்கமே சமசமாஜக் கட்சி பரிபூரண சுதந்திரத்தைக் கோரி வந்துள்ளது. இதற்குக் குறைந்த எதனைத்தானும் பிரதமர் பெறுவது முறையாக இருக்க மாட்டாது. பிரதமரின் இத்தீர்மானத்தை சபையின் இடதுபகுதி ஆட்சேபிக்கும்.

தேச மக்கள் முயற்சியே

தேச மக்களின் நோக்கங்களுக்கு இணையான தீர்மானமாக இது காணப்படவில்லை. பிரதமரின சுதந்திரம் என்று அழைக்கப்படுவது மக்களின் கோரிக்கைகளுக்கு மிக மிக குறைவானதாகும். இப்பொழுது சபை முன் உள்ள தீர்மானம் யூ. என். பி அங்கத்தினர் முயற்சியின் பெறுபேற்றைக் குறிக்கவில்லையென்பதனைச் சந்தோஷத்துடன் கூற விரும்புகிறேன். இலங்கை மக்கள் சுதந்திரத்துக்காக நடத்திய போராட்டத்தின் பயன்தான் இந்த அளவு சுதந்திரத்தையாயினும் பெற்றுக் கொடுத்துள்ளது.

சுதந்திரத்தைப் பெறுவதற்கு மக்கள் முயற்சித்த காலத்தில முழு தேசிய சுதந்திரமும

[4-ம் பக்கம் பார்க்க]

கடன்பட்டு இரண்டாந்தர வல்லரசான பிரிட்டன்

ஆசியாவிலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் ராணுவ பலமிழந்தது

ஆப்பிரிக்காவில் குடியேற்ற ஏகாதிபத்தியத்தை பலப்படுத்த முயற்சி

லண்டன், டிச. 2

முதல்தர வல்லரசாக இருந்த பிரிட்டன் இரண்டாவது யுத்தத்தின் காரணமாக பலமிழந்து, கடன்பட்டு இரண்டாந்தர வல்லரசாக கீழான நிலைமைக்கு வந்துவிட்டது. அதன் காரணமாக அது ஆசியாவிலும் மத்தியகிழக்கு நாடுகளிலுமிருந்து பின்வாங்கும் நிலைமை ஏற்பட்டது. இப்பொழுது பிரிட்டன் ஆப்பிரிக்காவில் தனது குடியேற்ற ஏகாதிபத்தியத்தை பலப்படுத்த முயல்கிறது.

மவுண்ட் பேட்டன் ஆப்பிரிக்காவுக்கு வைஸ்ராய்?

ஆப்பிரிக்காவில் உள்ள இந்த பிரிட்டிஷ் குடியேற்ற ஏகாதிபத்யத்தின் வைஸ்ராயாக லார்டு மவுண்ட் பேட்டன் நியமிக்கப்படுவார் என்று லண்டன் "ஸண்டே எக்ஸ்பிரஸ்" பத்திரிகை ஹேஷ்யம் கூறுகிறது.

லண்டனில் எலிஸபெத் இளவரசியின் விவாகம் நடந்தபொழுது பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு பிரதம மந்திரிகள், ஹைகமிஷனர்கள், பிரிட்டிஷ் பிரதமர் ஸ்ரீ அட்லி, பிரிட்டன் அந்நிய நாட்டு மந்திரி ஸ்ரீ பெவின், பாதுகாப்பு மந்திரி ஸ்ரீ அலெக்ஸாண்டர் ஆகியவர்கள் ஒன்று கூடிப் பேசுகையில் லார்டு மவுண்ட் பேட்டனை ஆப்பிரிக்க வைஸ்ராயாக நியமிக்கும் யோசனை அங்கீகரிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

ஐரோப்பியரல்லாதார் மகாநாடு கூட்ட ஏற்பாடு

டர்பன், டிச. 2

நேட்டால் டிரான்ஸ்வால் இந்தியர் காங்கிரஸின் அவசரக் கூட்டம் ஒன்று இன்று நடைபெற்றது. கூடிய சீக்கிரம் ஒரு தென்னாப்பிரிக்க இந்தியர் மகாநாடு கூட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இந்த மகாநாட்டைத் தொடர்ந்து ஒரு அகில ஆப்பிரிக்க ஆசியாக்காரர், தென்னாப்பிரிக்காவிலுள்ள ஐரோப்பியரல்லாதார் ஸ்தாபனங்கள் அடங்கிய ஒரு மகாநாடு கூட்ட ஏற்பாடு செய்யப்படும்.

ஜெரூஸலேம் நகரில் அமளி

யூதர்கள் கடைகளும் அராபியர் சினிமாவும் தீக்கிரை

பிரிட்டிஷ் ஸ்தாபனம் சாம்பலாக்கப்பட்டது

ஜெரூஸலேம், டிச. 2

கிறிஸ்தவர், யூதர், அராபியர் ஆகிய மூன்று வகுப்பினருக்கும் புனித ஸ்தலமாகவுள்ள ஜெரூஸலேம் நகரம் இன்று அல்லோலகல்லோலப்பட்டது. கட்டிடங்கள் எல்லாம் தீக்கொளுத்தப்பட்டு எரிந்து கொண்டிருந்தன. ராணுவ மோட்டார்களும் ஆயுதப் போலிசாரும் எங்கு பார்த்தாலும் யூதர்-அராபியர் கலகங்களை சமாளித்துக் கொண்டிருந்தனர். அராபிய இளைஞர்கள் யூதர் கடைகளைக்கொளுத்தினர் சாதாரண தீயணைக்கும் படையால் தீயை அணைக்கமுடியாது ராணுவத்தைச்சேர்ந்த தீயணைக்கும் படைகள் தருவிக்கப்பட்டன. அதற்குப் பதிலாக யூதர்கள் பெரியதோர் அராபிய சினிமா கொட்டகையைத் தீக்கொளுத்தினர். ஆத்திரங்கொண்ட யூதர்களும் அராபியர்களும் ஈடுபடவிருந்த பயங்கரமான பெருங்கலகத்தை பாலஸ்தீனத்திலுள்ள பிரிட்டிஷ் போலிசார் குறுக்கிட்டு சமாளித்தார்கள்.

ஜாபா நகரிலும் யூதர் கடைகள் கொளுத்தப்பட்டன. டெல்அவிவ் நகரிலும் குழப்பம் நடைபெற்றது.

கெய்ரோவுக்கு 40 மைல் தூரத்திலுள்ள பிரிட்டிஷ் ஸ்தாபனத்தை ஆயிரக்கணக்கான அராபியர் நெருப்புப்பந்தங்களை வீசி தீக்கொளுத்தி கட்டிடத்தை சாம்பலாக்கினர்.

பிரிட்டிஷ் ஸ்தாபனத்தின் நூல் நிலையத்தையும் சாம்பலாக்கினர். [ரா]

விசர் நாய் உபத்திரவம்

2000 நாய்களுக்கு பால் கட்டப்பட்டன.

கொழும்பு, டிச. 2

விசர்நாய் உபத்திரவத்தைச் சமாளிப்பதற்காக நாய்களுக்கு பால் கட்டப்பட்டு வருகிறது கடந்த மூன்று மாதங்களில் மொத்தம் 2000 நாய்களுக்குப் பால் கட்டப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது

கண்டி அசைஸ் கோர்ட்

கண்டி. டிச. 2

மத்திய பகுதி அசைஸ் கோர்ட் விசாரணைகள் கண்டியில் நீதிபதி கனகரத்தினே தலைமையில் நேற்று ஆரம்பமாயுள்ளது

இம்முறை மொத்தம் 32 வழக்குகள் விசாரிக்கப்பட இருக்கின்றன!

சுதந்திரன்
THE "SUTANTIRAN."

194 எ, தட்டாந் தெரு, கொழும்பு.
போன்: 8411.

சர்வஜித்துஹு கார்த்திகை மீ 19உ
வியாழக்கிழமை

எல்லாம் இரகசியமா?

இலங்கை மந்திரிகள் இரகசியத்தில் திட்டங்கள் தயாரிப்பதில் பேர்வாங்கியவர்கள். அரசியல் திட்டங்களையும், "சுதந்திர" ஒப்பந்தங்களையும் தான் திரை மறைவில் செய்கிறார்கள் என்று நினைத்தோம். ஆனால் இப்பொழுது நாட்டின் நலனையிட்டு உள்ளூரில் அமைக்கப்படும் வேலைத் திட்டங்களைக்கூட மற்றவர்கள் அறியாது செய்ய முனைந்துள்ளார்கள். புதிய வரவு செலவுத் திட்டத்தை பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பித்த நிதி மந்திரி ஒரு பத்து வருட வேலைத் திட்டத்தை தாம் அமைக்கப் போவதாகக் கூறியுள்ளார். அந்த வேலைத்திட்டம் இன்னது தான் என்பது அவரது பிரசங்கத்தில் மருந்துக்கேனும் கூறப்படவில்லை.

சென்ற கால வேலைத்திட்டங்களைப் பார்த்தால் மலை விழுங்கிய மகாதேவன்கள் போன்றே இருக்கின்றன. எத்தனை கோடி ரூபாய்களை பழைய விவசாய மந்திரி விவசாயத்திட்டங்களில் செலவழித்தார். அவற்றின் பலன் சோற்றுக்குப் பிறநாடுகளிடம் இரப்பதுதான். இதே போன்று இன்னும் எத்தனையோ திட்டங்கள் வகுக்கப்பட்டன. ஆனால் ஒன்றாலும் உருப்படியான பலனை இலங்கை மக்கள் பெறவில்லை.

இந்த நிலைமையில் நிதிமந்திரியின் இரகசிய வேலைத் திட்டம் என்னவாய் இருக்கக்கூடும்? பொது மக்கள் ஒவ்வொருவர் மனதிலும் இக் கேள்வி எழுந்திருக்கிறது. பொது மக்கள் தான் இத்திட்டங்களுக்குப் பணம் கொடுப்பவர்கள். ஆகவே, அவர்களுக்குத் தெரியாது ஒரு வேலைத்திட்டத்தை இரகசியத்தில் தயாரிப்பது முறையல்ல.

ஜனநாயக முறைப்படி, தேச மக்களின் விருப்பத்தை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும். இதற்காகவே பிரதிநிதிகளும் மற்றவர்களும் தெரிந்தெடுக்கப்படுகின்றனர். இதற்கு முரண்பாடாக தேச மக்கள் அறியாத திட்டங்கள் வகுப்பதும், ஒப்பந்தங்கள் எழுதுவதும் எந்தத் தேசத்துப் பிரதிநிதிகளுக்கும் அழகல்ல. உண்மையான ஜனப்பிரதிநிதிகள் இவ்வாறு செய்யவுமாட்டார்கள். இலங்கை மந்திரி சபையினர் இதை உணரவேண்டும். நிதி மந்திரியும் பொது மக்களின் பணத்தைச் செலவு செய்ய உத்தேசித்திருக்கும் வேலைத்திட்டம் இன்னதுதான் என்பதை உடனே அறிவிக்கவேண்டும். ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடவேண்டுமென்பார்கள். இங்கு, ஆறுதானோ வயல்தானோ, காடுதானோ என்பதும் தெரியவில்லை. எவ்வளவை அதில் வீசலாம் என்பதை எவ்விதம் கணக்கிட முடியும்? நிதி மந்திரி பதிலளிப்பாரா?

பிரிட்டன்-ரஷியா வர்த்தக ஒப்பந்தம்

சமரசப் பேச்சு ஆரம்பமாகும்

லண்டன், டிச 2

பிரிட்டன்-ரஷியா வர்த்தக ஒப்பந்தம் சம்பந்தமாக மீண்டும் சமரசப் பேச்சு ஆரம்பமாகும்.

பிரிட்டனில் 1946-வது வருடம் தொழிற் சங்கத்தில் 8714000 பேர்கள் அங்கத்தினர்களாகச் சேர்ந்திருக்கின்றனர்.

சயாம் பொதுத் தேர்தல்

பாங்காக், டிச. 2

சயாம் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் ஜனுவரி 25-ம் தேதிக்கும் பெபரவரி 10-ம் தேதிக்குமிடையே நடைபெறும்.

விகாரை லேன் கொலை வழக்கு

நால்வர் விடுதலை

ஒருவர் சுப்ரீம் கோர்ட்டில் விசாரிக்கப்படுவார்

கொழும்பு, டிச 2

வெள்ளவத்தை "விகாரை லேன்" கொலை வழக்கு கொழும்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நேற்று விசாரிக்கப்பட்ட பின்னர் சுப்ரீம் கோர்ட்டால் விசாரணை செய்யப்பட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இவ்வழக்கில் ஐவர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். அவர்களில் லயனல் பெர்னாண்டோ தவிர்ந்த இதர எதிரிகள் நால்வரும் விடுதலை செய்யப்பட்டனர்.

எம். பீரிஸ் பெர்னாண்டோ என்பவரே கத்தியால் குத்திக் கொன்றதாக இவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

ஆஸ்திரேலியாவில் வெள்ளையர் குடியேற்றம்

12,000 பேர் இலங்கை மார்க்கமாகபோயுள்ளனர்

கொழும்பு, டிச 3

ஆஸ்திரேலியாவில் குடியேறுவதற்காக ஆட்களை ஏற்றிச் செல்லும் நாலாவது கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு நேற்றுக் காலை வந்து சேர்ந்தது. இதில் இங்கிலாந்திலிருந்து 1500 பிரயாணிகள் ஆஸ்திரேலியா போகின்றனர்.

பிரிட்டன் மொத்தம் 60,000 பேரை வருட முடிவிற்குள் ஆஸ்திரேலியாவுக்குக் கப்பல் ஏற்றிவிடத் தீர்மானித்துள்ளது. இவர்களில் இதுவரை 12000 பேர் இலங்கை மார்க்கமாக ஆஸ்திரேலியா சென்றுள்ளார்கள்.

மணம் புரிவதாகக் கூறி கற்பளித்தாரம்

ரூ. 4000 நஷ்டஈடு யுவதியால் கோரப்படுகிறது

காலி, டிச 3

காலி அருணு வித்தியாலயத்தைச் சேர்ந்த எப். ஜி. ஹேவாவித்தாரண என்பவர் மீது கருணாவதி என்ற 18 வயது யுவதி தன்னைக் கற்பளித்தமைக்காக நஷ்ட ஈடாக ரூ. 4000 தரும்படியாக ஓர் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

1944 டிசம்பரில் திரு ஹேவாவித்தாரண பிரஸ்தாப பெண்ணிடம் தம்மை மணம் புரியும்படி வேண்டியதாகவும் அதற்குப் பெற்றோர் சம்மதத்துடன் மேற்படி பெண் ஒத்துக்கொண்டதாகவும் கூறப்பட்டது. இதன் பின்னர் எதிரி அடிக்கடி போய்ப் பெண்ணைச் சந்தித்து வந்த காலத்தில் 1945 செப்டம்பர் 3-ம் தேதி அவரைக் கற்பளித்ததாகவும் சொல்லப்பட்டது. ஆனால் அதன் பின்னர் தன்னை விவாகம் செய்யும்படி பிரஸ்தாப பெண் கோரிய போது அதற்கு ஹேவாவித்தாரண மறுத்துவிட்டதாகவும் ஆகவே ரூ. 4000த்தை நஷ்ட ஈடாகத் தனக்குச் செலுத்த வேண்டும் என்று கருணாவதி சார்பில் கோரப்பட்டிருக்கிறது.

பெண்ணும் தாயாரும் தன்னை கலியாணம் புரியும்படி கோரியது உண்மைதான் என்றும் ஆனால் தான் அதனை ஏற்றுக்கொண்டதாகக் கூறப்படுவது தவறென்றும் திரு ஹேவவித்தாரண கூறி எல்லாக் குற்றச்சாட்டுகளையும் மறுத்துள்ளார்.

ஸ்ரீ கே. பி. எஸ். மேனன் இந்தியா திரும்புவார்

இந்திய சர்க்காரில் புது பதவி

புதுடில்லி, நவ 3

சீனாவில் இந்தியாவின் தூதராக இருக்கும் ஸ்ரீ கே. பி. எஸ். மேனன் சீக்கிரம் இந்தியா திரும்பி இந்திய சர்க்காரில் அந்நிய இலாகா காரியதரிசியாக நியமிக்கப்படலாம் என்று டில்லி அதிகாரிகள் வட்டாரங்களில் சொல்லிக்கொள்ளப்படுகிறது. இப்பொழுது அப்பதவியில் உள்ள ஸர். கிரிஜா சங்கர் வாஜபேயர் உத்தியோகத்திலிருந்து விலகிக்கொள்வார் என்று தெரிகிறது.

பூமியில் கண்டெடுத்த நடராஜர் விக்ரஹம்

பஞ்ச உலோகங்களால் அமைந்தது

திருமங்கலம், டிச 3

திருமங்கலம் தாலுகாவைச் சேர்ந்த டொருப்பு மேட்டுப்பட்டி என்னும் கிராமத்தில், கல்லூர் பெரிய பெருமாள் தேவருக்குச் சொந்தமான புஞ்சை நிலத்தை சிவன்காளை தேவர் உழுதுகொண்டிருந்தபோது உலோகத்தால் ஆன ஒரு நடராஜர் விக்ரஹம் கண்டெடுக்கப்பட்டது.

பின்பு மதுரை ஜில்லா கலெக்டர் உத்தரவுப்படி அந்த விக்ரஹம் திருமங்கலம் கஜானாவிற்கு எடுத்துவரப்பட்டது.

திருமங்கலம் தாலுகா ஆபீஸில் சுமார் ஒரு வாரமாக இருக்கும் டி விக்ரஹத்தை தினசரி ஆயிரக்கணக்கானபேர்கள் ஜாதிமத வித்தியாசமின்றி போய்ப் பார்த்து வருகிறார்கள்.

மதுரை ஜில்லா கலெக்டர் ஸ்ரீ கே. ராமவர்ம ராஜாவை டி டொருப்பு மேட்டுப்பட்டி கிராம பொது ஜனங்கள் பேட்டிகண்டு தங்கள் ஊரில் கண்டெடுத்த டி விக்ரஹத்தை கிராமத்திற்கே திரும்பக் கொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். அதற்காக ஒரு கோவில் கட்டப்போவதாயும் முறையிட்டார்கள். அவர்களுடைய கோரிக்கையை அநுதாபத்துடன் கவனிப்பதாக கலெக்டர் வாக்களித்தார்.

டி நடராஜர் சிலை பஞ்சலோகங்களால் செய்யப்பட்டது. சிலையின் உயரம் சுமார் 1¼ அடி; பரதநாட்டிய கலையில் கூறியுள்ளபடி நடராஜர் தாண்டவ நடனமாடிய ரூபத்தில் சிலை அமைக்கப்பட்டிருக்கிறது. சிலை மிக மிக லக்ஷணமானது.

நடராஜர் பூதகணத்தின்மேல் நின்று அருகில் நாக சர்ப்பம் படமெடுத்து நிற்க, உடுக்கும் மற்றொரு கையில் நெருப்பும் கொண்டு நடனமாடும் ரூபத்தில் வெகு அழகாக அமைந்திருக்கிறது.

சுமார் 900 ஆண்டுகளுக்கு முன்பு இந்த சிலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும். பூமியில் புதைந்து சுமார் 100 வருடங்களுக்கு அதிகமாகுமென்றும் பஞ்சலோகங்களால் செய்யப்பட்ட இந்த மாதிரி சிலை இந்தியாவில் இதற்கு முன் எங்குமே பூமியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டதில்லையெனவும் தெரிகிறது.

நகரிலும் சுற்றுப்புறத்திலும் இதே பேச்சாகவே இருக்கிறது.

யந்திர யமனுக்குப் பலி

தொழிலாளியின் பரிதாப மரணம்

கொழும்பு, டிச 3

கோலவத்தை அரிசித் தொழிற்சாலையில் வேலை செய்யும் ஓர் தொழிலாளி யந்திரத்தின் உருளைகளில் சிக்கி அதனால் தமது ஒரு கரம் முற்றாக புறிந்து விழுந்துவிட, நெஞ்சிலும் படுகாயம் அடைந்ததன் காரணமாகக் காலமடைந்துவிட்டார்.

அவரது பெயர் என். டி. பெரேரா என்றும், இளம் வயதினர் என்றும் அறியப்படுகிறது.

நாவலப்பிட்டியில் 150 புதிய வீடுகள்

நிர்மாணிக்க நகர சபை முயற்சி

கொழும்பு, டிச. 3

நாவலப்பிட்டி நகர சபை 40 ஏகரா நிலம் வாங்கி அதில் பொதுமக்களின் குடியிருப்பு தேவைகளுக்காக 150 வீடுகளைக் கட்டுவதற்குத் திட்டமிட்டிருக்கிறது.

இதற்காக எதிர்பார்க்கப்படும் அரசாங்க உதவிப் பணம் ரூ. ஒன்றரை லட்சமும் செலவிடப்படும் என நகர சபைத் தலைவர் தெரிவித்தார்.

இக்குடியிருப்பின் திட்டத்தின் பிரகாரம் இவ்வீடுகளில் வாடகைக்கிருப்போரே நாளடைவில் வீட்டுச் சொந்தக்காரராவார்கள்.

இந்திய விஜயம்பற்றி பர்மா பிரதமமந்திரி அறிக்கை

பம்பாயில் ராஷ்டிரபதிக்கு வரவேற்பு வைபவம்

சுவிட்ஜர்லந்தில் அஸாத்ஹிந்த் நிறுவிய தேசபக்தர் திரும்பினர்

பண்டித நேருவை வரவேற்க பிரிட்டனின் ஆவல்

கல்கத்தா, டிச. 2

பர்மா பிரதம மந்திரி தக்கின் நுவும் அந்நியநாட்டு மந்திரி உ டின் டுட்டும் ரங்கூனிலிருந்து டில்லி செல்லும் மார்க்கத்தில் இங்குள்ள விமான நிலையத்தில் இறங்கியிருந்தபோது அவர்களை பத்திரிகா நிருபர் பேட்டி கண்டார். தக்கின் நு நிருபரிடம் பின்வருமாறு தெரிவித்தார்:- நாங்கள் இந்தியாவுக்கு நேசப்பான்மையாக விஜயம் செய்கிறோம். பர்மா, இந்தியா ஆகிய இரு நாடுகள் சம்பந்தமாக பல விஷயங்களைக் குறித்துக் கலந்து பேச இந்திய பிரதம மந்திரி பண்டித நேருவின் அழைப்பின் மீது நாங்கள் செல்கிறோம். பர்மா சுதந்திரமடைந்த ஆறு மாதத்திற்குள் நான் பிரதம மந்திரி பதவியிலிருந்து விலக உத்தேசித்திருப்பதாக வெளிவந்த செய்தி உண்மைதான். ஆனால் எல்லாம் சுதந்திரத்திற்குப் பிறகு நாட்டில் ஏற்படும் நிலைமையைப் பொறுத்திருக்கிறது.

பர்மா அந்நியநாட்டு மந்திரி உ டின் டுட் பின்வருமாறு தெரிவித்தார்:- பர்மாவில் வாழும் பல வகுப்பினர்கள் சம்பந்தமாக பர்மா சர்க்கார் பாரபட்சமாக ஒரு தனிப்பட்ட வகுப்பின் மீது துவேஷம் பாராட்டமாட்டார்கள். பர்மாவிலுள்ள மேனாட்டார்களுக்கு எவ்வித உரிமைகள் வழங்கப்படுமோ அதே உரிமைகள் இந்தியருக்கும் அளிக்கப்படும். மணிபுரி சமஸ்தானம் பர்மாவிலுள்ள கபா பள்ளத்தாக்கைக் கேட்கிறது. சைனா இந்தோ-சீனாவின் எல்லையிலுள்ள பர்மாவைச் சேர்ந்த 77 ஆயிரம் சதுர மைல் விஸ்தீரணமுள்ள கச்சின் சமஸ்தானத்தைக் கேட்கிறது. ஆனால் பர்மா சர்க்கார் பர்மாவிலுள்ள ஒரு அங்குல நிலத்தைக்கூட விட்டுக் கொடுக்கப் போவதில்லை. பாதுகாப்புப் பிரச்னை சம்பந்தமாக பர்மா சர்க்கார் இன்னும் கவனம் செலுத்த ஆரம்பிக்கவில்லையாதலால பாதுகாப்பு சம்பந்தமாக இந்தியாவும் பர்மாவும் சேர்ந்து ஒத்துழைப்பதுபற்றி இப்பொழுது எதுவும் சொல்ல முடியாது.

பம்பாயில் ராஷ்டிரபதி

புதுடில்லி, டிச. 2

காங்கிரஸ் தலைவர் டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் இன்று பிற்பகல் புதுடில்லியிலிருந்து இங்கு வந்தார். பம்பாயிலுள்ள நூற்றுக்கணக்கான பொது ஸ்தாபனங்கள் அவருக்கு மாலைகள் அணிவித்து வரவேற்றன. காங்கிரஸ தொண்டர்களும் தேச சேவிகைகளும் அணிவகுத்து நின்றனர்.

நாடு கடத்தப்பட்டிருந்த தேச பக்தர் திரும்பினர்

இந்திய சுதந்திரத்திற்காகப் போராடியவரும் தேசப் பிரஷ்ட வாழ்க்கை நடத்தி வந்தவரும் சுவிட்ஜர்லந்தில் அசாத ஹிந்த் சர்க்கார் நிறுவியவருமான டாக்டர் பிரசானந்தா கோஷ் இன்று தனி விமானத்தில் இங்கு வந்து சேர்ந்தார். அவருடன் அவருடைய மனைவியும் புத்திரர்களும் வந்தனர். ஸ்ரீமதி கோஷ் ஆஸ்திரிய கோமான் ஆவர்ஸ்பெர்கின் புத்திரியாவர்.

பிரிட்டன் இந்திய மாணவர் இயக்கம்

லண்டன், டிச. 2

பிரிட்டனிலுள்ள இந்திய மாணவர் இயக்க மாளிகையில் நடைபெற்ற இந்திய மாணவர் கூட்டத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் "இந்தியா பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குள்ளிருக்க வேண்டுமென்று கொண்டு வரப்பட்ட தீர்மானம் தோல்வியுற்றது.

நேருவை வரவேற்க ஆவல்

லண்டன், டிச. 2

பண்டித நேரு பிரிட்டனுக்கு விஜயம் செய்யக்கூடும் என்று இந்தியாவிலிருந்து வெளிவந்த செய்திக்குப் பல காரணங்கள் உண்டு. சாம்ராஜ்ய நாடுகளின் பிரதம மந்திரிகளைச் சந்தித்துப் பேச பிரிட்டிஷ் மந்திரிகளுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. பண்டித நேருவையும் சந்தித்துப் பேச அவர்கள் ஆவலுடையவராக இருக்கிறார்கள். முக்கியமாக பண்டித நேரு இந்தியாவின் அந்நிய நாட்டு மந்திரியாகவும் இருப்பதால் பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரி பெவின் அவரைச் சந்தித்துப் பேச ஆவல்கொண்டிருக்கிறார். பண்டித நேரு பிரிட்டன் வந்தால் அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்க இங்குள்ளோர் தயாராக இருக்கிறார்கள்.

சொந்த இடம் போகும் யூனியன் ஜாக்

இந்தியாவில் முதன் முதலாக பிரிட்டிஷ் ஆட்சியின் சின்னமாக 17 வது நூற்றாண்டில் கல்கத்தாவிலுள்ள வில்லியம் கோட்டையில் பறக்கவிடப்பட்ட பிரிட்டிஷ் யூனியன் ஜாக்கொடி ஆகஸ்ட் 15ம் தேதி இந்தியா சுதந்திரமடைந்தபோது இறக்கப்பட்டது. அதை வைத்திருக்கும் சர் ஆச்சின் லெக் அக்கொடியை வட ஸ்காட்லந்திலுள்ள போர்ட் வில்லியம் நகரசபை ஏற்றுக்கொள்ள இணங்கியிருக்கிறது. ஜனவரி மாத வாக்கில் ஆடம்பரச் சடங்குகளுடன் வேவல் பிரபு அக்கொடியை நகரசபைக்குக் கொடுப்பார்.

காஷ்மீர் போர்

ஜம்மு, டிச 2

ஜம்முவுக்கு தென்கிழக்கே 15 மைல் தூரத்திலுள்ள காஷ்மீர் துருப்புகளை மலைஜாதியார் தாக்கினர். ஜம்முவுக்கு தென்மேற்கே 15 மைல் தூரமெல்லையில் மீர்பூர் முதல் ஆங்கூர்வரை 70 மைல நீள போர்முனையில் எதிரிகள் அணிவகுப்பு நடத்தி வருகின்றனர்.

டாக்டர் சயாவுதீன்

லண்டன், டிச. 2

அலிகார் சர்வகலாசாலையின் மாஜி உப அத்தியட்சகரான டாக்டர் சயாவுதீன் அகமது பக்கவாத நோயால் பீடிக்கப்பட்டு அபாயகரமான நிலைமையில் ஆஸ்பத்திரியில் இருக்கிறார். (ராய்ட்டர்)

சயாம் மாஜி வர்த்தக மந்திரி கைது

சிங்கப்பூர் மாஜி பிரதமர் அடைக்கலம்

பாங்காக், டிச. 1

பழைய சயாம் அரசாங்கத்தின் வர்த்தக மந்திரியாக இருந்த டுனுவாங் இன்று கைது செய்யப்பட்டார். அவரது வீட்டையும் பழைய அரசாங்கத்தின் கைத்தொழில மந்திரி புரியாபட்டின் வீட்டையும் ராணுவ அதிகாரிகள் பரிசோதனை செய்தார்கள். மாஜி கைத்தொழில மந்திரி இருக்கும் வீடு சர்க்காருக்குச் சொந்தமாதலால் அதைக்காலி செய்யும்படி அவருக்கு உத்தரவிடப்பட்டது. சிங்கப்பூரில் தப்பியோடிப் போயிருக்கும் மாஜி பிரதம மந்திரி பனம்யாங்குடன் கடற்படைத் தளபதி வஜுயையும் அந்தரங்க காரியதரிசியும் இருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. அந்தக்காரியதரிசி சயாம மன்னர் ஆனந்தா கொலை சம்பந்தமாகத் தேடப்பட்டு வருகிறார். இவர்களைப்பற்றி தகவல அறிவிக்கும்படி சிங்கப்பூரிலுள்ள சயாம ஸ்தானிகருக்கு கட்டளையிடப்பட்டிருக்கிறது. (ராய்ட்டர்)

விமான இன்ஸ்பெக்டர் நியமனம்

கொழும்பு, டிச 3

இலங்கைப் பொதுஜன விமானப் போக்குவரவுப் பகுதியில் விமான இன்ஸ்பெக்டராக இ. ஆர். கொடலி. எப். நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் முன்னர் இங்கிலாந்திலும் இதே பதவியில கடமை ஆற்றி உள்ளவர் என்றும் இத்தகைய பதவியை வகித்த ஒரு சில இலங்கையருள் இவரும் ஒருவர் என்றும் அறியப்படுகிறது.

நைரோபி, டிச. 1

44 வயது நிரம்பிய ஒரு மாஜி ராணுவ உத்தியோகஸ்தரான ஜி. டி சைல்ட் என்பவர் நைரோபி தேசிய நந்தவனத்தில் கொலை செய்து கிடக்கக் காணப்பட்டார்.

அவரது மண்டை பலமாக நொறுங்கியிருந்தது.

அவரது இளைய சகோதரர் 4 இளம் இந்தியர்கள் காஞ்சென்றவர் காரில் இருந்ததாகவும் தன்னைக் கண்டு அவர்கள் ஓட்டம் பிடித்ததாகவும் கூறுகிறார். [ராய்ட்டர்]

பாராளுமன்ற அங்கத்தினர் மீது வழக்கு

அவதூறான கட்டுரை எழுதியதாகக் குற்றச்சாட்டு

கொழும்பு, டிச. 3

பாராளுமன்ற அங்கத்தினரான சோமவீர சந்திரசிறி மீதும், டொன்சந்திரதாசா மீதும் நிதாச என்னும் பத்திரிகையில் திரு. டி. எஸ். சேனநாயக்கா பற்றியும் திரு டட்லி சேனநாயக்காபற்றியும் அவதூறான இரு கட்டுரைகள் வெளியிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

இவ்வழக்கு தற்போது கொழும்பு உதவி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு வருகிறது.

நேற்று விசாரணையின்போது ரிஜிஸ்டார் ஜெனரல் ஆபீஸில், பத்திரிகைப் பகுதியில் வேலை பார்க்கும் குமாஸ்தா டி. என். கோட்டகேயும், கல்வி இலாகா பிரதம மொழிபெயர்ப்பாளர் முதலியார் அபயசேகராவும் சாட்சியம் அளித்தனர்.

வழக்கு விசாரணை இன்றும் தொடர்ந்து நடைபெறுகிறது.

பாராளுமன்றத்தில் 10மணிநேரம் சத்தியாக்கிரகம்

கமியூனிஸ்ட் அங்கத்தினர் வெளியேற்றப்பட்டார்

பிரெஞ்சு நாடெங்கும் போலிசார்-தொழிலாளர் போராட்டங்கள்

அரசாங்க ஊழியரும் பயமுறுத்துகின்றனர்

பாரிஸ், டிச. 2

பிரான்ஸ எங்கும் வேலை நிறுத்தம் இன்னும் தொடர்ந்து நடைபெறுகிறது. அதன் பயனாக எங்கு பார்த்தாலும் சச்சரவுகளும் நடைபெற்றுவருகின்றன. மத்திய பிரான்ஸிலுள்ள ரயில்வே ஜங்ஷன் நகரான லிமோகஸில் ரயில்வே ஸ்டேஷனிலும் டிப்போக்களிலும் பல மணிநேரம் போராட்டங்கள் நடைபெற்றன. பாராளுமன்ற கமியூனிஸ்ட் அங்கத்தினர் தூண்டுகோலால் இப்போராட்டங்கள் நடைபெற்றன. போலிஸார் கண்ணீர்புகை பிரயோகஞ்செய்து கூட்டங்களைக் கலைத்தனர்.

நேற்றிரவு 6 நகரங்களிலுள்ள மின்சார நிலையங்களிலிருந்து வேலை நிறுத்தஞ்செய்து கொண்டிருந்த தொழிலாளர்களை போலிஸார் அப்புறப்படுத்தினர்.

மின்சார யந்திரங்களை இயக்குவதற்கு கடற்படையிலிருந்த மின்சார எஞ்சினியர்களைக் கொண்டுவந்து அந்நிலையங்களில் நிறுவினர்.

பிரஞ்சு மந்திரி சபை

பாரிஸ், டிச. 2

பிரான்ஸில் ஏற்பட்டுள்ள அரசியல், சமூக நெருக்கடியைப்பற்றிப் பரிசீலனை செய்ய நாளை பிரஞ்சு மந்திரி சபை கூடும்.

பிரான்ஸும் அதன் ஆதிக்கத்திற்குட்பட்ட மற்ற நாடுகளும் சேர்ந்த பிரஞ்சு யூனியன் கூட்டத்தைக் கூட்டுவதுபற்றியும் மந்திரி சபையில் ஆலோசனை நடைபெறும்.

வேலை நிறுத்த எதிர்ப்பு மசோதாபற்றி பாராளுமன்றத்தில் மீண்டும் இன்று பிற்பகல் ஆரம்பமான விவாதம் இன்னும் நடைபெறுகிறது. 5 மணிநேரம் மசோதாவைத் தாமதப்படுத்த வீண் விவாதங்கள் செய்யப்பட்டன. பாராளுமன்றத்தில் குழப்பம் செய்த கமியூனிஸ்ட் அங்கத்தினரை கூட்டத்திற்கு வரலாகாதென்று சபா நாயகர் தடுத்திருக்கிறார். இதன் காரணமாக சில அங்கத்தினர்கள் சபாநாயகரைப் பலமாகத் தாக்கிப் பேசினர். கடைசியில் சபாநாயகர் மீது ஒரு நம்பிக்கைத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேறியது.

கமியூனிஸ்ட் அங்கத்தினர் கலாஸ என்பவர் இரவில் 10 மணி நேரம பாராளுமன்றத்திலே உட்கார்ந்துகொண்டு சத்தியாக்கிரகம் செய்தார். அவர் புரட்சிசெய்யத் தூண்டிப் பேசியதன் காரணமாக அவரை வெளியேறும்படி சபாநாயகர் கட்டளையிட்டார். காலை 5 மணிக்குத்தான் அவர் வெளியேறினார்.

மற்றும் 6 இதர கமியூனிஸ்ட் அங்கத்தினர்களும், நண்பர்களும் அவரைச் சூழ்ந்துகொண்டு நின்றனர். அவர் முதலாவது வெளியேற மறுத்து இரவில் 10 மணி நேரம் உட்கார்ந்துகொண்டிருந்தார். சபாநாயகர் வேலை நிறுத்த எதிர்ப்பு மசோதா விவாதத்தை ஒத்திவைத்துவிட்டார். கலாஸ சத்தியாக்கிரகம் செய்தபோது பாராளுமன்றக் கட்டிடத்தில் ஒரு வாசலைத் தவிர மற்ற வாசல்கள் அடைக்கப்பட்டு ராணுவமும் போலிஸும் காவல்செய்து வந்தனர்.

மசோதா நிறைவேறியது

பாரிஸ், டிச 3

வேலைநிறுத்த எதிர்ப்பு மசோதா பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும்போது அதைத்தாமதப்படுத்த கமியூனிஸ்ட் அங்கத்தினர்கள் அடிக்கடி குறுக்கிட்டு முட்டுக்கட்டை போட்டுவந்தனர். 6½ மணிநேரமாக மசோதா விவாதிக்கப்பட்டு மசோதாவின் முதல் பகுதி நிறைவேறியது. கமியூனிஸ்டுகளைத் தவிர மற்றவர்கள் அனைவரும் சாதகமாக வோட்டுக்கொடுத்தனர். அரசியல் திட்டப்படி உள்ள உரிமைப்படி வேலை நிறுத்தம் செய்ய இந்த மசோதா தடையாக இருக்காது என்ற திருத்தத்துடன் மசோதா நிறைவேறியது.

பாரிஸ நகரிலும் மாகாணங்கள் எல்லாவற்றிலும் போலிஸாருக்கும் வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்களுக்குமிடையே சச்சரவுகள் நடைபெற்றன. நேற்றிரவும் பிரஞ்சு சர்க்கார் தொழிற் சர்க்காருடன் சமரசம் பேச முயன்றார்கள்.

கமியூனிஸ்ட் எதிரியான பிரஞ்சு தொழிலாளர் பெடரேஷன் தலைவர் ஜோஹாக்ஸ தொழில் மந்திரியைச் சந்தித்துப் பேசினார். இன்னும் பேசுவார்.

அரசாங்க ஊழியர்கள் அதிக சம்பளம் கோரி வியாழக்கிழமை முதல் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக பயமுறுத்துவதால் அவர்களது சம்பளம் பற்றி நேற்றிரவு பிரஞ்சுமந்திரி சபை கூடி ஆலோசனை செய்தது. (ராய்ட்டர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை இந்தியர் உரிமைகள்

அடைவதற்கு முயற்சிக்க வேண்டும்

பாராளுமன்ற அங்கத்தினர் திரு. தொண்டமானுக்கும் திரு. ராஜலிங்கத்திற்கும் மகத்தான வரவேற்பு

புசெல்லாவை, டிச. 3

இலங்கை இந்தியன் காங்கிரஸ பாராளுமன்ற அங்கத்தினரான தொண்டமானுக்கும் ராஜலிங்கத்துக்கும் சென்ற வெள்ளிக்கிழமை புசெல்லாவையில் ஓர் குதூகல வரவேற்பளிக்கப்பட்டது.

அரை மைல் நீளமான தொழிலாளரின் ஊர்வலம் இவ்வைபவத்தின் சிறந்த அம்சமாக விளங்கியது.

ஊர்வலத்தில் யானைகள் மீது காங்கிரஸ கொடியும் இலங்கை மாதா கொடியும் எடுத்துச் செல்லப்பட்டன. நடனம், நாதசுரம், கரகம், கோலாட்டம் என்பன சிறந்த முறையில் விளங்கின. சரஸவதி வித்தியாலய மாணவர்கள் வரிசையாக வீதிகளை அலங்கரித்தனர் நகர முழுவதும் காங்கிரஸ கொடிகளாலும் தோரணங்களாலும் ஜோடனை செய்யப்பட்டிருந்தது.

திரு தொண்டமானும் ராஜலிங்கமும் வந்திறங்கியதும் "காங்கிரசுக்கு ஜே" "தொண்டமானுக்கு ஜே" "ராஜலிங்கத்துக்கு ஜே" 'லங்கா மாதாவுக்கு ஜே" என்ற கோஷங்கள் வானைப் பிளந்தன.

பின்னர் நகர மக்களால் கணக்கிடமுடியாத அளவுக்கு தலைவர்கள் இருவருக்கும் மாலைகள் சூட்டப்பட்டன.

வைபவத்திற்கு அதிகார் பணபொக்கே, ஆர். எஸ். எஸ். பெல்பொல, முகாந்திரம் சமரசேகரா முதலிய சிங்கள முக்கியஸதர்களும் சமூகமளித்தனர். அவர்களும் மாலை சூட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

சரஸவதி வித்தியாலயத்தில் நடந்த பொதுக்கூட்டத்திற்கு அதிகார் டி. பி. பணபொக்கே தலைமை வகித்தார்.

திரு ஜேப்ஜ் தமது வரவேற்புப் பேசசில் திரு ராஜலிங்கம் சரஸவதி வித்தியாலயத்தைக் கட்டி வளர்த்த வரலாற்றையும் தொண்டமானின் பெருந்தன்மையையும், தலைவர் பணபொக்கேயின் சிறந்த குணாதிசயங்களையும் பாராட்டினார்.

முகாந்தரம் சமரசேகராவும் அதிகார் பணபொக்கையும் அதன் பின் பேசுகையில் எல்லாச் சமூகத்தினரும் ஒற்றுமையாய் வசிக்கவேண்டுமென்று கூறினார்கள்.

திரு தொண்டமான் பேசுகையில் தோட்டத் தொழிலாளர் குடியால் கெட்டழிந்து வருவதாகவும், முன்னேற வேண்டுமானால் இவற்றை விட்டொழிக்க வேண்டும் என்றும் பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்க வேண்டும எனவும் வற்புறுத்திப் பேசினார்.

திரு இராஜலிங்கம் இலங்கை இந்தியர் தமது உரிமைகளை அடையத் தயங்காது முயற்சிக்கவேண்டும எனக் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் ஆர். எஸ். எஸ். பெலபொல, கே சுப்பையா. எம். நாகலிங்கம், வி எஸ் மெனன், கே. சின்னையா ஆகியோரும் பேசினார்கள்.

திரு. அஜித் ராய் கொழும்பு விஜயம்

இந்திய துவேஷம் இலங்கை முதலாளிகளின் சதியே

கொழும்பு, டிச. 4

டிராட்ஸ்கிஸின் கமியூனிஸ்டு புரட்சி இயக்கத்தைச் சேர்ந்த திரு. அஜித் ராய் பிரிட்டனிலிருந்து இந்தியா திரும்பும் மார்க்கத்தில் இங்கு வந்திருக்கிறார். நேற்று அவர் வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் திரு எட்மண்ட் சமரக்கொடி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் "இந்திய அரசியலின் தற்காலப் போக்கு" என்னும் விஷயம் பற்றிப் பேசினார். இலங்கையைப்பற்றி அவர் நிருபரிடம் அபிப்பிராயம் தெரிவித்த போது இலங்கை முதலாளிகள் தங்கள் சுயநலத்தின் பொருட்டு பொது ஜனங்கள் தங்கள் மீது துவேஷம் காட்டாது அவர்களது கவனத்தை வேறு பக்கம் திருப்ப இந்திய துவேஷத்தை பொது ஜனங்களிடையே தூண்டிவிடக் கூடுமென்று கூறினார்.

மீன்பிடித் தொழில்

கொழும்பு, டிச 4

மீன்பிடித் தொழில் சம்பந்தமாக மீன்பிடி தொழில் மந்திரி காரியாலயத்தார் தயாரித்துள்ள திட்டத்தில் மீன்பிடி தொழில் ஆலோசனை போர்டு அங்கத்தினருக்கு விநியோகிக்கப்பட்டிருக்கிறது. இத்தொழிலில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் தங்களைக் கலந்துகொண்ட பிறகே திட்டத்தை அமுல் செய்யவேண்டுமென்று கோருகின்றனர். இத் திட்டத்தின் நோக்கம் இத் தொழிலை தேசியமயமாக்குவதேயாகும். இதன்படி மீன் விற்பனை வசதி போர்டும் கமிஷனும் நியமிக்கப்படும்.

தோட்டத்தில் களவு

கொழும்பு டிச 3

கொத்மலையிலுள்ள ஹூனே கோட்டுலா தோட்டத்தில் ரொக்கமும் நகையுமாக ரூபாய் 2565 களவு போயிருப்பதாகத் தெரிகிறது. அவை தலைமைக் கங்காணி வீரையாவுடையன.

கொழும்பு ரேடியோ

தமிழ் நிகழ்ச்சிகள் சீர்திருத்தம்

கொழும்பு, டிச 2

கொழும்பு ரேடியோ நிலையத் தமிழ் நிகழ்ச்சி காரிய சபை அங்கத்தவர் திரு எம். எஸ். திருவிளங்கம் 30-11-47ல் ரேடியோவில் குறித்த நிலையத் தமிழ் நிகழ்ச்சிகளைப்பற்றிப் பேசிய பேச்சின் சாரம்:-

1940-ம் ஆண்டு இலங்கை ஒலிபரப்பு வஷயங்களைத் திருத்தியமைக்க திரு கே. வைத்தியநாதன் ஸி. ஸி. எஸ். தலைமையில் ஓர் சபை ஏற்படுத்தப்பட்டது. அச்சபை கூறிய யோசனையின்படி தமிழ் சிங்களம், ஆங்கிலம் ஆகிய பாஷைகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளைச் சரியாக நடத்த ஒவ்வொரு சபை ஏற்படுத்தப்பட்டன. தமிழ் நிகழ்ச்சிக் காரிய சபை திரு கே. கனகரத்தினம் எம். பி. அவர்களின் தலைமையில் வேறும் சில அங்கத்தவர்களோடு தமிழ்நிகழ்ச்சிகளைக் கவனித்து வருகிறது. இச் சபை தனது கடமையை நேயர்கள் விரும்பத்தக்க முறையில் நடத்த நேயர்களின் உதவியும் ஆலோசனையும் வேண்டும். நேயர்கள் கூடிய அளவு தமிழ் நிகழ்ச்சிகளைக் கேட்டுத் தங்கள் அபிப்பிராயங்களை அடிக்கடி மேற்படி சபைக்குத் தெரிவிக்க வேண்டும். திருச்சி, சென்னை முதலிய இடங்களைப்போல கொழும்பிலே தமிழருக்கென்றே பிரத்தியேகமாக நிகழ்ச்சிகள் நடத்த முடியாது. அந்த இடங்களிலுள்ளதை போல இங்கே பாடகர்களும் இல்லையெனலாம்.

அப்படியிருந்தாலும் அவர்கள் முன்வந்து நிலைய டாப்பில் தங்கள் பெயர்களைப் பதிவித்துக்கொள்வதும் குறைவு. பக்கவாத்தியகாரரும் நிலையத்தாரால் அனுமதிக்கப்பட்டவராகவேயிருக்கவேண்டும். இவர்களிலும் ஏதாவது குறையிருந்தால் அதை நேயர்கள் நிலையத்தாருக்கு அறிவிக்க வேண்டும்.

தமிழ் நிகழ்ச்சிகளில் எதை நேயர்கள் ஆவலோடு கேட்கிறார்களென்பதையும் எதைஒதுக்குகிறார்களென்றும் வேறு எப்படிப்பட்டவற்றைச் சேர்க்கலாமென்றும் நிலையத்தாருக்கு அடிக்கடி அறிவிக்கவேண்டும். அப்படியறிவித்தால் அந்த யோசனைகளுக்கேற்றவாறு நிலையத்தாரும் தங்கள் தமிழ் நிகழ்ச்சிகளைத் திருத்தியமைக்க உதவியாயிருக்கும்.

ஆசிரியருக்குக் கடிதம்

நுவரெலியா தமிழ் கலவன் பாடசாலை மூடப்பட மாட்டாது

ஐயா,

சென்ற செவ்வாய்க்கிழமை (26-11-47) வெளியிடப்பட்ட "சுதந்திரன்" இதழில நுவரெலியா தமிழ்க் கலவன் பாடசாலை இடவசதி யின்மையால் மூடப்பட இருக்கிறது" என பிரசுரிக்கப்பட்டது. மேற்படி பாடசாலை சம்பந்தமான உண்மை விபரங்கள் இவை:-

நுவரெலியாவில் "டயோசிசன்" சபைக்குச் சேர்ந்த ஆங்கில, சிங்கள, தமிழ்ப் பாடசாலைகள் [Holy Trinity English, Singalese Tamil Schools] இருக்கின்றன. இவற்றுள் தமிழ் பாடசாலை [Holy Trinity Tamil School] பி. டபிள்யூ. டி. பகுதியாருக்குச் சொந்தமான நிலத்தில் உள்ள கட்டிடத்தில் இருக்கிறது. சிங்கள பாடசாலை தமிழ்ப் பாடசாலை உள்ள கட்டிடத்தில் இருந்து பிரிந்து, சிறிது தூரத்திலே உள்ள ஆங்கிலக் கலலூரியின கட்டிடத்தில் நடைபெற்று வந்தது. பின 1947 ம் வருடம் புரட்டாதி மாதம் ஆங்கிலக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டு, கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோரின் சேவையால சிறந்த முறையில நடத்தப்படுகிறது.

தற்பொழுது பி. டபிள்யூ. டி. பகுதியார் தங்களின் அவசிய தேவையின் பொருட்டு, தமிழ் பாடசாலை உள்ள கட்டிடத்தையும் நிலத்தையும் எடுக்கத் தீர்மானித்துள்ளனர். ஆகவே அவர்களின் வேண்டுதலுக்கிணங்க, அப்பாடசாலை மானேஜர் [Manager of the Diocesan Schools] வேறு இட வசதியின்மையால், தமிழ் மாணவர் நலனை எண்ணி ஆங்கிலக் கல்லூரி உள்ள கட்டிடத்தில் தமிழ்ப் பாடசாலையையும் நடாத்த எண்ணியுள்ளனர். அப்படி நடாத்தும்பொருட்டு, அனுமதி கோரி, கல்விப் பகுதியாருக்கு அறிவித்தனர். இலங்கை மாணவர் கல்வி நலனை முன்னேற்றும் கல்விப் பகுதியார் அதற்கு அனுமதியளிப்பார்கள் என்பது எமது நம்பிக்கை.

சிங்களப் பாடசாலை ஆங்கிலக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டமையால், முன்னிலும் பன்மடங்கு சிறந்து விளங்குகிறது. இக் கல்லூரி கிறிஸ்தவ கல்லூரியாயிருப்பினும் ஒடுங்கிய மனப்போக்கைத் தவிர்த்து கிறிஸ்தவ, புத்த, இந்து மதங்களின் உயரிய கொள்கைகளை அந்தந்த மதத்துப் பிள்ளைகளுக்குப் போதித்துச் சிறந்த சமூகத் தொண்டாற்றி வருகிறது. இக் கல்லூரியுடன் தமிழ்ப் பாடசாலையும் சேருமானால் தமிழ் மாணவர்களும் தமிழுடன் ஆங்கிலமும் கற்று, சங்கீதம் முதலிய கலைகளிலும் தேர்ச்சியடைவார்கள். அதுவுமின்றி சிங்களவர், தமிழர் என்ற வகுப்புவாத உணர்ச்சியும் நீங்கி இலங்கையராகத் தோளோடு தோளாய்த் தொண்டாற்றும் வலிமையும் பெறுவர்.

மேற்படி தமிழ் கலவன் பாடசாலையை "டயோசிசன் சபை" மூடுவதற்குத் தீர்மானிக்கவில்லை. அதற்குப் பதிலாக இருளடைந்த சூழ்நிலையில் இருந்த தமிழ் மாணவர்களுக்குத் தற்கால முறைப்படி நல்ல சூழல் ஏற்படுத்தித் தகுந்த ஆசிரியர்களைக் கொண்டு சேவை செய்விக்கத் தீர்மானித்துளது.

ஆகவே பத்திரிகைகளில் வெளிவந்த வதந்திகளினால், நூரளை தமிழ் மக்கள் கலக்கமடையாது, பாடசாலையின் முன்னேற்றத்திற்கு ஆவன செய்வார்கள் என்று நம்புகிறோம்.

இங்ஙனம்,
எம். ஆறுமுகம்
கே. எஸ். மொஹமெட் இப்றாஹிம்
(தமிழ் மாணவர் சங்கக் காரியதரிசிகள்)
ஹோலி ரிறினிற்றிக் கல்லூரி
நுவரெலியா
28-11-47

யூதர்-அராபியர் கலகம் பரவுகிறது

ஜெருசலேம் நகரில் இரண்டரை லட்சம் பவுண் நஷ்டம்

யூதர்கள் 10 ஆயிரம் பேருள்ள தொண்டர்படை திரட்டினர்

கெய்ரோவில் அராபிய நாடுகள் கூடி ஆலோசிக்கும்

ஜெருசலேம், டிச. 2

யூத தேசியப் பாதுகாப்பு இயக்கத்தாரான 'ஹாகனாத்' இன்றிரவு ஆடவரும், பெண்டிருமாக பதினாயிரம் தொண்டர்கள் கொண்ட படையைத் திரட்டினார்கள். அராபியர்கள் தாக்கினால் அத்தாக்குதலை பிரிட்டிஷ் போலிசாருக்கு உதவியாக நின்று சமாளிக்கவே இப்படை திரட்டப்பட்டது

ஐக்கிய தேச சபை பாலஸதீனத்தைப் பிரிக்கத் தீர்மானித்திருப்பது கண்டு ஆக்ரோமுற்ற அராபியர்களும் குதூகலங்கொண்ட யூதர்களும பாலஸ்தீனத்தில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தியதால்பல இடங்களில்கலகங்களும் தீக்கொளுத்துதலும் தாக்குதல்களும் நடைபெற்றன. கலகம் நாட்டின் வட பகுதியிலும தென் பகுதியிலும் பரவி வருகின்றது.

இதுவரை மறைவிலிருந்த 'ஹாகனாத' யூதப்புரட்சி ராணுவம் இன்றைய கலகத்தில் பகிரங்கமாக வெளியேறி பழைய ஜெருசலேமிலும் அழுஞ்சுவருக்குக் கால் மைல் தூரத்திலுள்ள மான்டிபோர் பகுதியைச் சுற்றி வளைந்து கைகளில் தடிகளுடன் உட்கார்ந்து காவல் புரிந்து வருகின்றனர். அவர்களுடைய சராசரி வயது 16 தானிருக்கும். பழைய ஜெருசலேம நகரில அராபியர்கள் அதிகமாக வாழும் பிரதேசத்திலுள்ள யூதர்கள் இரும்புக் கதவுகளைத் தாளிட்டுக் கொண்டு பாதுகாவலுடன் பதுங்கியிருக்கின்றனர். யூதர்களும் அராபியர்களும் தீகொளுத்தியதால் ஜெருசலேம் நகரில் இரண்டரை லட்சம பவுண் வரை நஷ்டமேற்பட்டிருக்கிறது.

அராபிய லீக்

கெய்ரோ, டிச. 2

பாலஸதீன சம்பந்தமாக அக்டோபர் மாதம் அராபிய நாடுகளின் பிரதிநிதிகள் பெய்ரூத் நகரில் கூடிச் செய்த தீர்மானத்தால் தற்சமயம் ஏற்பட்டுள்ள நிலைமைபற்றி ஆலோசிக்க 7 அராபிய நாடுகளின அந்நிய நாடு மந்திரிகளை அங்கத்தினர்களாக உடைய அராபிய லீக்கின் அரசியல் கமிட்டி டிசம்பர் 8-ம்தேதி இங்கு கூடும். டிசம்பர் 12-ம் தேதி அராபிய லீக் கவுன்சில் கூடும் அதில் அராபிய நாடுகளின் பிரதம மந்திரிகள் அனைவரும் கலந்து கொள்வார்கள். யூதர்களை பகிஷ்கரிக்க மும்முரமான நடவடிக்கை எடுத்துக் கொளவதுபற்றியும் முடிவு செய்யப்படும். அராபிய நாடுகளில் ராணுவ ஒத்துழைப்புபற்றி அராபிய லீக் இப்பொழுதுதான் முதன் முதல் நடவடிக்கை எடுத்துக் கொள்கிறதென அதன் காரியதரிசி அசாம் பாஷா தெரிவித்தார்.

ஜெருசலேம் அரசாங்கம்

நியூயார்க், டிச. 2

பிரிவினைத் திட்டப்படி சுதந்திர நகராகும் ஜெருசலேமுக்கு புதிய அரசாங்கம் நிறுவுவதுபற்றி அறிக்கை தயாரிக்க ஐக்கிய தேச தர்மகர்த்தா கமிட்டி ஒரு உப கமிட்டியை நியமித்தது. இந்த உப கமிட்டியில், ஆஸ்திரேலியா, சைனா, பிரான்ஸ், மெக்ஸிகோ, பிரிட்டன், அமெரிக்கா அங்கம் வகிக்கும்.

யூதர்கள் பாராட்டு

லண்டன், டிச. 2

இங்கு நடைபெறும் யூதர் தேசிய நிதி சம்பந்தமான வருடாந்தரக் கூட்டத்தில் யூதர்கள் கௌரவக் குறிப்பான 'தங்கப் புத்தகத்தில்' ஐக்கிய தேச சபையில பாலஸ்தீன பிரிவினைக்கு ஆதரவளித்த 33 நாடுகளின் பெயர்கள் பொறிக்கப்பட்டன.

பிரிட்டன் 27 வருட காலமாக பாலஸ்தீனத்தை நிர்வகித்ததாலும், அப்பொழுது அங்கு யூதர் குடியேற்றம அமைக்க இடங்கொடுத்ததாலும் பிரிட்டனின் பெயரும் அப்புத்தகத்தில் பொறிக்கப்பட்டது.

யூதர்கள் கொலை

ஜெருசலேம், டிச 2

இன்றிரவு ஜாபா-ஜெருசலேம் ரஸதாவில் ராணுவ லொறியில் சென்ற இரு யூதர்களை அராபியர்கள் தாக்கிக் கொன்றனர். மற்றொரு யூதர் காயமடைந்தார். லொறியையும் தீக்கொளுத்தினர். பிரிட்டிஷ் துருப்புகள் சுடவே அவர்கள் ஓடிவிட்டனர்.

ஜாபாவில் யூதர்களின் கடைகள் மீது கல்லெறிந்த அராபியக் கூட்டத்தை பிரிட்டிஷ் போலிசார் தடியடிப் பிரயோகம் செய்து விரட்டினர்

(ராய்ட்டர்)

பர்மா சுதந்திர மசோதா

லார்டு சபையில் திருத்தப் பிரேரணை

லண்டன், டிச 2

இன்று பர்மா சுதந்திர மசோதா லார்டு சபையில் விவாதிக்கப்பட்டபோது, பர்மா சுதந்திரம் பெற்றபின் அங்குள்ள பிரிட்டிஷ் அதிகாரிகள் உத்தியோகத்திலிருந்து விலகுவதால் போதிய நஷ்ட ஈடு பர்மா சர்க்கார் கொடுக்க வேண்டுமென்றும், வேலையிலிருக்கும் பிரிட்டிஷ் அதிகாரிகள் மற்ற அதிகாரிகள் போல நடத்தப்படவேண்டுமென்றும், ஹைகோர்ட் நீதிபதிகளுக்கும் போதிய நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்றும் லார்டு மன்ஸ்டர் ஒரு திருத்தப் பிரேரணை கொண்டுவந்தார். இவைகளைப் பற்றி பர்மா சர்க்காருடன் பேச்சுவார்த்தை நடைபெறுவதாக பர்மா மந்திரி லார்டு லிஸ்டோவல் பதிலளித்தார். மசோதா வியாழக்கிழமையன்று மீண்டும் விவாதிக்கப்படும் அதனபிறகு அடுத்த வாரத்திற்குள் மன்னரின் அங்கீகாரத்தைப் பெறும். (ராய்ட்டர்

சட்டவிரோதமாக பந்தயம் பிடித்தவர்கள்

நால்வருக்கு அபராதம்

கொழும்பு, டிச. 3

கொழும்பு தற்காலிகப் பிரதம மாஜிஸ்டிரேட் பண்டித குணவர்தன கலலூரி மாணவர் எம். புகாரி மீது சட்ட விரோதமாகப் பந்தயம் பிடித்ததற்காக ரூ 100 அபராதம் விதித்துள்ளார்.

சனிக்கிழமைக் குதிரை ரேஸ் சம்பந்தமாக பந்தயப பிடிப்பை நடத்திய டொன் ஹரமானிஸ் ரூபேர என்ற காலியைச் சேர்ந்தவருக்கு ரூ 500 அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. அபராதத்தைச் செலுத்தத் தவறினால் 3 மாத கடூழிய தண்டனையை அவர் அனுபவிக்க வேணடும்

பியதாச என்பவர் பந்தயத்துண்டு வைத்திருந்ததன் காரணமாக ரூ 100 அபராதம் விதிக்கப்பட்டார். செலுத்தத் தவறினால் இரண்டு வாரச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேணடும்.

தெமட்டகொடையைச் சேர்ந்த பலீல என்பவருக்கும் அபராதம் ரூ 100 விதிக்கப்பட்டது. செலுத்தத் தவறும் பட்சத்தில் இரண்டு வாரச் சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடும்.

கல்கபணுவத்தையைச் சேர்ந்த எல. எம ஜியாத் பந்தயப் பிடிப்புக்காகக் குற்றம் சாட்டப்பட்டபோது தாம குற்றவாளி அலல என மறுத்தார். அவர் 1000 ரூபாய் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

விசாரணை டிசம்பர் 17-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

ஏழாலைக் கொலை வழக்கு

எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், டிச. 2

ஏழாலையைச் சேர்ந்த அப்பாக்குட்டி சரவணமுத்து என்பவர் மீது மயில்வாகனம் செல்லையா என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதாகத் தொடரப்பட்ட வழக்கில் எதிரி நிரபராதி என விடுதலை செய்யப்பட்டார்.

காலம் சென்ற செல்லையா மீது எதிரியான அப்பாக்குட்டியின் சகோதரர் மகனைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதாகத் தொடரப்பட்ட வழக்கில் அவர் சுப்ரீம் கோர்ட் விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டவர் என்று கூறப்பட்டது. காலம்சென்றவர் ஓர் கடைக்கு பீடி வாங்கச் சென்று மீண்டபோது எதிரி பின்னால் வந்து துப்பாக்கியால் சுட்டதாகவும் சற்றுத் தூரம் ஓடியதின் பின்னர் அப்பால் ஓடமுடியாது அவர் வீழ்ந்ததாகவும சொல்லப்பட்டது.

காலம்சென்றவரின் மருகர் ஒருவர் சாட்சியம் அளிக்கையில் தான் ஓர் மாமரக் கொப்பில் இருந்து மாங்காய் பறித்துக்கொண்டிருந்ததாகவும் அப்போது எதிரி துப்பாக்கியால் சுட்டதைத் தான் கண்டதாகவும் தெரிவித்தார்.

எதிர்தரப்பில் ஆஜரான கண்டிப் போலிஸைச் சேர்ந்த ஒரு சார்ஜனும், கான்ஸ்டபிளும் சம்பவம் நடந்த தினத்தன்று எதிரி மாலை 9-30 மணிக்குக் கண்டி போலிஸ் ஸ்டேஷனுக்கு வந்ததாகவும் பஸ் ஸ்டாண்டில் நிற்கும் போது தம்மிடம் இருந்த பணம் யாராலோ பறிக்கப்பட்டுவிட்டதாக அவர் புகார் செய்ததாகவும் சாட்சியம அளித்தார்கள். இதன் பேரிலேயே வழக்குத்தள்ளுபடி ஆயிற்று. [ஈ-ச]

இன்று விஞ்ஞான மகாநாடு

திரு. சேனநாயக்கா திறந்துவைப்பார்

கொழும்பு, டிச 4

இன்று சர்வகலாசாலையிலுள்ள "இங்ஜியரிங் மண்டபத்தில்" இலங்கை விஞ்ஞான சங்கத்தின் மூன்றாவது வருடாந்த விழாவைப் பிரதம மந்திரி திரு. சேனநாயக்கா திறந்துவைப்பார். அட்டவணையில் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன

இன்று

பேராசிரியர் கந்தையா-'விஞ்ஞான தொழில் ஆராய்ச்சிப் பயிற்சியளித்தல்' என்பதுபற்றிப்பேச்சு.

டாக்டர் டி. ஈடன்-'நிலத்தின் செழிப்புபற்றிய பிரச்னையின் சரித்திர ரீதியான அம்சங்கள்' என்பதுபற்றிய பிரசங்கம்.

டாக்டர் எஸ். பரணவித்தான-'சமீபகால புதைபொருள் கண்டுபிடித்தவர்கள்' என்பதுபற்றி சித்திர சகிதமான ஓர் பேச்சு.

நாளை

டாக்டர் எஸ். செல்லப்பா-'தேச மக்களின் தேகாரோக்கியம்' என்பதுபற்றிப் பேச்சு.

சனிக்கிழமை

டி. சிவப்பிரகாச பிள்ளை-'இலங்கையில் தொழிற் சக்தியின் உற்பத்தி' என்ற விஷயமாகப் பிரசங்கம்.

கட்டிட வேலைகளுக்கு
வேண்டிய சீமந்தும், இரும்புச் சாமான்களும் எங்களிடம் மிகவும் குறைந்த விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
விலை விபரங்களுக்கு கீழ்க்காணும் விலாசத்திற்கு உடனே எழுதவும்.
ஓரியன் மெர்க்கண்டைல் ஏஜென்ஸி,
346, 348. பழைய சோனகத் தெரு, கொழும்பு.
Telegram: "ORICON" Telephone: No. 2445

கிறிஸ்மஸ்
பெருநாளை முன்னிட்டு
நவீனமுறையில் தயாரிக்கப்பெற்ற
சேலம், கோயம்புத்தூர் 100-ம் நம்பர் 80-ம் நம்பர்
நூல் சாரிகள் விற்பனைக்கு தயார்
இத்துடன் பெங்களூர் பெனாரஸ், காஷ்மீர் பட்டு சேலைகளும் இன்னும் சகல விதமான ஜவுளி தினுசுகளும் இப்போதுதான் வந்து சேர்ந்திருக்கின்றன.
வேதநாயகம் & கொம்பனி,
140, கெய்ஸர் தெரு,
கொழும்பு.

உங்களைப் பீடித்திருக்கும் கொடிய பிணிகளை
அகற்றிவிட்டீர்களா?
நோயை அறிந்து மருந்துண்டால் பிணி விரைவில் அகலுவது நிச்சயம். எனவே உங்களைப் பீடித்திருக்கும் பிணி என்னவென்று அறிந்தீர்களா? இல்லையானால் அதனை அறிய சிவானந்த சித்தர் வைத்தியசாலையின் பிரதம வைத்தியரும் நாடிப் பரீட்சை நிபுணரும் இலங்கையிலும், இந்தியாவிலும் ரோகதெனக் கைவிடப்பட்ட வியாதிகளையெல்லாம் தீர்த்து பெரும் புகழும் கீர்த்தியும் பெற்ற வைத்தியபூபதி AYUR. Dr. V. K. S. செல்லப்பாபிள்ளை M. A., M. S. (கல்கத்தா) அவர்களைக்கண்டு உங்கள் கை நாடியைப் பரீட்சியுங்கள். அவர் உங்கள் நோயை அறிந்து தகுந்த மருந்து கொடுத்து உத்தரவாதமாய்த் தீர்த்துக் கொடுப்பார் அவர் நவம்பர் (19-ம் உ) தொடக்கம் டிசம்பர் 10 உ வரை எமது கிளை வைத்தியசாலை நம்பர் 23/7 ஸ்டான்லி ரோடு, (வின்ஸர் தியேட்டருக்கு அருகாமையில) யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்து நோயாளருக்கு உத்தரவாத சிகிச்சை அளிப்பார். நோய் எதுவானாலும் சரி உத்தரவாதமாக தீர்த்துக் கொடுக்கப்படும். AYUR. Dr. இமானுவேல் ஜோஸப் L. A. M. S. அவர்கள ஹெட் ஆபீஸ, 92, செட்டியார் தெரு. கொழும்பில் தங்கி இருப்பார். இந்த சமயத்தை இழந்து விடாதீர்கள்.
சிவானந்த சித்தர் வைத்தியசாலை,
92, செட்டியார் தெரு, கொழும்பு.
கிளை: 768, லோவர் வீதி, பதுளை.
23/7, ஸ்டான்லி ரோடு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரண சுதந்திரமல்ல, போலிச் சுதந்திரமே!

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென்றே அவர்கள் கேட்டு வந்துள்ளனர் முழு தேசிய சுதந்திரமும் கிடைக்காத பட்சத்தில் அவர்கள் தங்களது லட்சியத்தை அடைய முடியாதென்று காட்டி விட்டனர். நாட்டிலே நடத்தப்பட்ட ஒவ்வொரு வேலை நிறுத்தமும் தேச சுதந்திரத்தைப் பெறும் போராட்டத்தின் ஒரு பகுதியேயாகும்.

கடன்கார பிரிட்டன்

இன்று பிரிட்டன் ஒரு ஓட்டாண்டி தேசமாக இருக்கிறது இன்று பிரிட்டன் அமெரிக்காவிடம் இருந்து 1000 கோடி டாலர் கடன்பட்டுள்ளது. தன்னைத்தானே பாதுகாத்து நிர்வகித்து நடத்தமாட்டாது பிரிட்டன் தத்தளிக்கிறது. இன்று பிரிட்டன் வல்லரசாக இல்லை. மிக விரைவில் பிரிட்டன், டச்சு அரசாங்கத்திலும் மிக மோசமான நிலைமைக்கு வந்துவிடும்.

இலங்கைக்குக் கொடுக்கப்பட்ட இந்தளவு சுதந்திரமும், திரு. டி. எஸ். சேனநாயக்காவைப் பிரதமராக்கச் செய்வதற்காகவே வழங்கப்பட்டதாகும். இன்று பிரதமர் பகிடிக்கிடமான எதையேக வைத்துக்கொண்டு அதற்காக குதூகலத்தை தெரிவிக்கும்படி கூறுகின்றார். இலங்கைக்கு உண்மையில் சுதந்திரம் வழங்கப்பட்டிருப்பின் இலங்கையிலுள்ள எல்லா மக்களும் அதனை குதூகலத்துடன் வரவேற்பார்கள்.

பிரதமர் கைச்சாத்திட்ட உடன்படிக்கைகள் எங்கள் நாட்டை அடிமையாகப் பிணைப்பனவாகும். இந்த ஒப்பந்தங்கள் காலவரையற்றது என பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் உதவி குடியேற்நாட்டு மந்திரி கூறியுள்ளார். கானடா, ஆஸ்திரேலியா, நியூஜிலந்து முதலிய நாடுகள் பிரிட்டனுடன் கொண்டுள்ள தொடர்புகள் வித்தியாசமானவையாகும். இலங்கையை பிரிட்டனின் ஒரு பகுதியாகக் கொள்ளவேண்டுமென இலங்கை உள்நாட்டு மந்திரி விரும்புகிறார். கானடா முதலிய நாடுகளின் மக்களின் இன ஒற்றுமை காரணமாக அவை ஒன்றாக இருக்கின்றன.

இந்த ஒப்பந்தங்களுக்கு காலவரையறையில்லை யென்பது இப்பொழுது இருக்கும் நிலைமையில் தெரிகிறது. இவற்றை இல்லாமல் செய்வது பிரிட்டனின் கையிலேயே இருக்கிறது. பிரிட்டன் விரும்பும்போது தான் இவற்றை இல்லாமற் செய்ய முடியும். இவை அவசியமென்று காணப்படும்வரை பிரிட்டன் இந்த ஒப்பந்தங்களை தனக்குச் சாதகமாகவே உபயோகித்துக்கொள்ளும். இதுதான் உண்மை நிலைமையாகும்.

இலங்கையைப் பொறுத்த மட்டில் 'டொமினியன்' என்ற பதம் சுதந்தர மசோதாவிலிருந்து ஏன் விடப்பட்டதென்பதை அறிய விரும்புகிறேன். இலங்கை விரும்பினாலும் இந்த ஒப்பந்தங்களிலிருந்து விடுபட முடியுமென்பது சாத்தியமல்லவென்பது யாருக்கும் தெரியும்.

சுதந்திர மசோதா திருத்தம்

இலங்கை சுதந்திரமசோதாவில் திருத்தம் செய்யப்படுவதானால் அதற்கு பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்கு இப்பாராளுமன்றம் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும். இந்த திருத்தத்தை பிரிட்டிஷ் பாராளுமன்றம் அங்கீகரித்தால் தான் இலங்கை சுதந்திர மசோதாவில் திருத்தம் செய்ய முடியும். இல்லாது விட்டால் திருத்தம் செய்யமுடியாது.

இலங்கையின் சுதந்திர மசோதாவையும் இந்திய சுதந்திரச் சட்டத்தையும் ஒப்பிட்டு நோக்கின் இலங்கையின் சுதந்திர மசோதா மிகவும் கீழ் நிலையில் இருக்கிறதென்பது தெரியவரும் இதுதான் உண்மை நிலையாகும்.

திரு ஈ. எப். என். கிரேஷியன் பேசுகையில் இலங்கையில் தான் பறங்கியர் ஒரு தனி வகுப்பினராக மதிப்புக் கொடுக்கப்படுவதாகவும் இலங்கையின் முன்னேற்றத்துக்காக தாங்கள் சேவை புரிவதாகவும் குறிப்பிட்டுவிட்டு சுதந்தர மசோதா பற்றி பேசினர். பிரிட்டிஷ் காமன் வெல்த் நாடுகளுக்கிடையே ஒரு நாடாக இலங்கை வரப்போவதைக் குறித்து தாம் சந்தோஷப் படுவதாகவும் கூறினர் தொடர்ந்து அவர் பேசியதாவது:-

சந்தேகத்தை நிவர்த்திக்க வேண்டும்

உண்மையில் இச் சுதந்திர மசோதா மூலம் கிடைத்ததை சிலர் ஒத்துக்கொள்கின்றனர் இல்லை. எதிர்க் கட்சியினரின் மனதிலே உள்ள சந்தேகங்களை நிவர்த்திக்க பிரதமர் முயற்சிக்க வேண்டும். இந்த மசோதாவை மந்திரி சபை வரவேற்கிறது. சில அங்கத்தவர்கள் இம் மசோதா பற்றி சந்தேகிக்கின்றனர் என்றும் அவற்றை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு பிரதம மந்திரி அறிவிக்க நடவடிக்கை எடுப்பாரெனவும் நம்புகிறேன்.

திரு [illegible], திரு. அல்பர்ட் பீரிஸ், திரு ஆகர் சொய்ஸா முதலியோர் பேசினர். திரு. ஆகர் சொய்ஸா பேசுகையில் சுதந்திர மசோதாவையும், உடன்படிக்கைகளையும் பரிசோதித்து அபிப்பிராயம் கூறுதற்கு இலங்கையைச் சேராத வெளிநாட்டு அரசியல் சட்ட நிபுணரின் உதவியை பிரதமர் நாடவேண்டுமென்றும் இது நடந்தால் எல்லாக் கஷ்டங்களும் நீங்கிவிடுமென்றும் கூறினர்.

திரு டி பி. சுபசேன (பிங்கிரியா) பேசுகையில், இன்று கிடைத்துள்ளதெனக் கூறப்படும் சுதந்திரம் வெறும் கானல் போன்றதென்றும், இன்று ஆட்சி புரியும் வகுப்பினர் தாங்கள் எல்லாவற்றையும் சாதித்துவிட்டதாக திருப்திபட்டுக்கொண்டிருக்கின்றனர் என்றும் ஆனால் வர்க்கப் போராட்டம் தொடர்ந்திருப்பதுடன் மிகப் பெரிய அளவுக்கு வரவும் கூடுமென்றும் குறிப்பிட்டுவிட்டு அரசியல் சமூக பொருளாதார விடுதலைக்குத்தான் தாங்கள் பாடுபடுவதாகவும் கூறினர்.

திரு. ஏ. எல். தம்பியையா பேசுகையில், குதூகலிப்பதற்கு இங்கு ஒன்றுமில்லையென்றும் அதற்குரிய காரணங்களையும் விளக்கிக் கூறவும் இந்த உடன்படிக்கைகளிலிருந்து விலகிக்கொள்ளும் உரிமை உண்டா என்பதை பிரதம மந்திரி விளக்கிக் கூறவேண்டுமென்றும் கூறினர்.

திரு. பொன்ட்ரேக் ஜெயவிக்கிரமா, திரு. ஆர். பெரேரா ஆகியோர் பேசினர்கள் இவர்களுக்குப் பின் திரு. கே கனகரத்தினம் (வட்டுக்கோட்டைத் தொகுதி) பேசியதாவது:-

சுமார் 30 வருடங்களுக்கு முன் பொது அரசாங்க சேவையிலீடுபட்ட உத்தியோகஸ்தர்கள் அனுபவித்த கஷ்டங்கள் அளவில. அரசாங்க சேவையில உயர் பதவிகள் எல்லாம இலங்கையருக்கு வகிக்கமுடியாதபடி கட்டுப்பாடுகள் இருந்த காலமும் உண்டு. எங்கள் முன்னேற்றங்களுக்கு முட்டுக்கட்டைகளாக இருந்தனவற்றை நீக்க நாங்கள் போராடவேண்டியிருந்தது."

இரவு 8 மணியானதால்சபை நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டது. இரவு போஜனத்திற்குப் பின் சபை நடவடிக்கை ஆரம்பித்தபோது திரு கனகரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:-

அரசாங்க உத்தியோகஸ்தர் அனுபவித்து வந்த கஷ்டங்கள் டொனமூர் அரசியல் திட்டம் அமுலுக்கு வந்ததால் ஓரளவு நீங்கிற்று. முதலாவது உலக யுத்த காலத்தில பெரிய வல்லரசுகளில் தங்கியிருந்த நாடுகள் எங்கும் பெருத்த மாறுதல்கள் எல்லாம் ஏற்பட்டு வந்தன திடீர் திடீரென பல இயக்கங்கள் ஆரம்பித்தன. தலைவர்களால் நடத்தப்பட்ட போராட்டங்கள் சுதந்திரத்துக்கு வழிகாட்டின. தேசத்தின் பல அரசியல் கட்சிகளும் தேச சுதந்திரத்துக்காக எவ்வளவோ பாடுபட்டன பதினறு வருட காலத்தின் பின் சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ அரசாங்க உத்தியோகஸ்தருக்கு இச் சுதந்திரம் கிடைத்தது.

இரண்டாவது உலக யுத்தத்தின் பின் பிரிட்டன் வேறு மாற்று வழியின்றி சுதந்தரத்தைக் கொடுத்துள்ளது. சில நாடுகள் முழுச் சுதந்திரத்தையும் பெற்றுள்ளன.

யாழ்ப்பாணத்திலே திரு ஸி சிற்றம்பலம் (தபால் தந்தி இலாகா மந்திரி) முன் ஒரு முறை பேசுகையில் பிரிட்டிஷார் இலங்கையில் இருப்பதை தாம் முற்றாக விரும்பவில்லையென்றும் அவர்கள் இலங்கையைவிட்டு வெளியேறிவிடவேண்டுமென்றும் கூறினர்.

திரு ஐவன் கிஸநாயகா (வாரியப்பொலா) பேசுகையில் சுதந்திர மசோதாபற்றி குறிப்பிட்டுவிட்டு இலங்கை மக்களின் வறுமையை ஒழிப்பதற்கு ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொண்டார்.

திரு எம். எஸ். சுப்பையா (பதுளை தொகுதி பிரதிநிதி) பேசுகையில, இலங்கை தொழிலாளருக்கு வேலை கொடுப்பதற்காக இங்குள்ள இந்தியர்கள இலங்கையைவிட்டு வெளியேறிவிடவேண்டுமென்று வாரியப்பொலை பிரதிநிதி கூறியதை பலமாக கண்டித்தார். இலங்கையில் தோட்டங்களை ஏற்படுத்திய பிரிட்டிஷாரைப் பாராட்டிப் பேசினர்.

இத்துடன இரவு 10 மணியானதால் சபை நடவடிக்கை இன்று பிற்பகல் ஒரு மணி வரைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

செனட் சபைக் கூட்டம்

நேற்று செனட் சபைக் கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு செனட் சபைத் தலைவர் ஸர் ஜி விஜயகூன் தலைமையில் நடைபெற்றது.

உள்நாட்டு மந்திரி ஸர் ஒ. ஈ. குணத்திலகா, சுதந்திர மசோதாவையிட்டு செனட் சபையின் பிரதிநிதிகளின் குதூகலத்தைத் தெரிவித்துக்கொள்ளும் தீர்மானமொன்றை சபையில் பிரரேபித்தார்

அவர் பேசுகையில் ஆரம்பத்தில் பிரிட்டிஷ் ஆட்சி அதிருப்திகரமாக இருந்தபோதிலும் அவர்களது ஆட்சியில் இலங்கைக்கு நன்மை செய்துள்ளனர் என்றும் இலங்கையில் எவ்வளவோ பத்திரிகைகள் இருந்தபோதிலும் சுதந்திரம் பெறுவதற்கு உதவியாக ஒன்றுமே உழைக்கவில்லையென்றும் இலங்கை சுதந்திர மசோதாபற்றி பிரதிநிதிகள் சபையில இப்பொழுது விவாதம் நடைபெற்று வருவதாகவும் பாதுகாப்பு ஒப்பந்தம்பற்றி எல்லோரும் கண்டனம் செய்து வருவதாகவும், அந்த ஒப்பந்தம் இலங்கையை பலவந்தமாக கட்டுப்படுத்தக் கூடியதல்ல வென்றும் ரஷியா தனது வெளிநாட்டுக் கொள்கை இன்னதென்று விளக்கமாகத் தெரிவித்தால் ரஷியாவுடன் கூட இலங்கை ஒப்பந்தம் செய்துகொள்ளக் கூடிய உரிமை உண்டென்றும் ஐ. தே. ஸ்தாபனத்தில இலங்கை சேர்வதற்கு பிரிட்டன் ஆதரவளிக்க இருக்கிறதென்றும் உதாரணமே இலங்கைக்குக் கிடைக்கும் சுதந்தரம உண்மையானதென்பது தெரியுமென்றும் இம் மசோதாவில் குற்றங் குறைகள் இருந்தால அதனைத் திருத்த பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குத் தான் அனுப்பிவைக்க முடியுமென்றும இலங்கை பிரிட்டனோடு செய்துள்ள ஒப்பந்தத்தை இந்தியப் பத்திரிகைகள் ஆதரிக்கின்றனவென்றும் பத்திரிகைகளின கருத்து இந்திய மக்களதும் மந்திரிகளதும் கருத்தும் என்றதென்றும் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் அங்கத்தினர்கள் இதனை ஆதரிக்க வேண்டுமென்றும் செனட் சபை உபதலைவர் திரு பெரிசுந்தரம் இதனை கட்டாயம் ஆதரிப்பாரென்று தாம நம்புவதாகவும் தெரிவித்தார் திரு ஜான்ஸ் இப்பிரேரணையை ஆமோதித்தார். இதன் பின் சபை நடவடிக்கை இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது

விமான விபத்திற்கு 6 பேர் பலி

வாஷிங்டன், டிச. 1

தயோமா விமான நிலையத்தில் ஒரு விமான விபத்து ஏற்பட்டதால் மொத்தம் 6 பேர் வரை மாண்டுபோய் விட்டார்கள். 11 பேர் அபாயகரமான நிலையில் இருக்கின்றனர். இறந்தவர்களில இரு பெண்களும் ஒரு 21 மாதக் குழந்தையும் உண்டு. (ராய்ட்டர்)

பர்மாவின் வடபகுதியை சீனா கோருகிறது

கச்சின் சமஸ்தானம் பர்மா யூனியனைச் சேர்ந்தது

ரங்கூன், டிச. 1

வட பர்மாவில் 77000 மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசங்கள் தங்களுக்குச் சொந்தமானதென்று சீன சர்க்கார் உரிமைபாராட்டுவதற்கு இடங்கொடுக்க முடியாதென இன்று பர்மா சர்க்கார் அந்நிய நாட்டுக் காரியாலயப் பிரதிநிதி தெரிவித்தார் அப்பிரதேச மக்கள் பர்மா யூனியனில் சேர இணங்கியிருப்பதால் ஜனுவரி 4-ம தேதி பர்மா சுதந்திரமடையும் போது அப்பிரதேசங்களும் பர்மா யூனியனிலேயே இருக்கும் என்றார் இதைப்பற்றி சீன சர்க்காரிடமிருந்து தகவல் கிடையாதென்றும இப்பிரச்னையை ஐக்கிய தேச ஸ்தாபனத்திற்கு விட வேண்டிய அவசியமில்லையென்றும தெரிவித்தார்.

வட பர்மாவிலுள்ள கச்சின் சமஸ்தானத்தைத்தான் சைனா கோருகிறது இது 7 லட்சம் ஜனத்தொகையுடையது. இந்த சமஸ்தானம் தனி சுதந்திரமனுபவிப்பதுடன் பர்மா யூனியனில் இணைக்கப்பட்டுள்ளது. அதன் பிரதிநிதி துவா சிம்வா பர்மா எல்லைப்புற வ்வகார இலாகாவின் உதவி மந்திரியாக இருக்கிறார். (ராய்ட்டர்)

விளையாட்டுச் சங்க திறப்பு விழா

ரக்வானை, நவ. 29

ரக்வானை விளையாட்டுச் சங்கக் கட்டிட திறப்பு விழா 19-11 47 பிற்பகல் 4 மணியளவில் ஆரம்பமாயிற்று, புதிய கட்டடமும். மைதானமும, தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கத்தவர்களின் அழைப்பின் பேரில திறப்பு விழாவிற்குப் பாராளுமன்றச் சபைத் தலைவர் திரு. ஏ. எப். மொலமுரே, பலாங்கொடை பிரதிநிதி ஈ. டபிள்யூ மதாயூ, அரசாங்க ஏஜண்ட திரு. சான்டஸ், ஜில்லா மாஜிஸ்டிரேட் திரு. பெர்னாண்டோ உட்பட ஏராளமான தோட்டத் துரைமாரும், அநேக பிரமுகர்களும் பிரசன்னமாய் இருந்தனர். சரியாய் 4 மணிக்கு திரு ஏ. எம். அசீஸ் ஸி. ஸி. எஸ். அவர்களால் சங்கக் கூட்டம் திறந்து வைக்கப்பட்டது திரு மொலமுரேயும், திரு. மத்யூவும விளையாட்டு மைதானத்தை ஆரம்பித்துவைத்தனர். (ந-நி)

வாலிப முஸ்லிம்களின் கூட்டம்

ரக்வானை, நவ 29

ரக்வானை வாலிப முஸலிம் சங்க ஆதரவில் 29-11-47 மாலை 7-30 மணியளவில் ஜனாப் ஏ. எ. அசீஸ் ஸி. ஸி. எஸ். தலைமையில முஸலிம்கள் அடங்கிய மாபெரும பொதுக் கூட்டமொன்று இங்குள்ள பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. தலைவரை வாலிப முஸலிம் சங்கத் தலைவர் மலர்மாலை சூட்டி வரவேற்றார். பாடசாலை மாணவரால் வந்தனோபசார கீதம் பாடப்பெற்று, ஆசிரியர் முகமது அவர்களால் வரவேற்புப் பிரசங்கம் நடத்தப் பெற்றது பின்னர் ஜனாப் அசீஸ் அவர்கள் வாலிப முஸலிம் இயக்கம் ஆரம்பமான வரலாற்றையும் முஸலிம்களின் பண்டைக்கால நாகரீகம், கலாசாரம, மதக் கட்டுப்பாடு, இலங்கை முஸலிம்களின் பிற்போக்குநிலை, முதலியவற்றையும் பற்றி அழகியதோர் சொற்பொழிவு நிகழ்த்தியதுடன் தம்மால் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் முஸலிம இலவசக் கல்வி நிதிக்கு எல்லா முஸலிம்களும் உதவி செய்யவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். பின் திரு கருணாரதன சிங்களத்தில் பேசியபின கூட்டம் இனிது முடிவு பெற்றது. (ந-நி)

லண்டன டிச 1

நவம்பரில் 4 கோடி 80 லட்சம் ஸ்டெர்லிங் பெறுமதியான தங்கம் தங்களால் விற்கப்பட்டிருப்பதாக பிரிட்டிஷ் பொக்கிஷ இலாகா இன்று அறிவித்தது

அத்துடன் 6 கோடி டாலர்கள் சர்வதேச நிதியில் இருந்து இம்மாதம் விலைக்கு வாங்கப்பட்டிருப்பதாகவும் பொக்கிஷ இலாகா தெரிவித்தது.

வெளி நாடுகளுடன் இந்தோனேஷியா வர்த்தகம்

மூவர் கமிஷனில் ஆலோசிக்கப்படும்

பட்டேவியா. டிச. 1

இவ்வாரம் மூவர் கமிஷன் கூடும்போது, இந்தோனேஷியா குடியரசு நாடு வெளி நாடுகளுடன் மீண்டும் வர்த்தகத்தை நடத்துவதுபற்றி ஆலோசிக்கப்படும்.

டச்சு புனருத்தாரண மந்திரி திரு நெஹர் ஆம்ஸ்டர்டாமிலிருந்து பட்டேவியாவுக்குப் புறப்பட்டு வருகிறார். (ராய்ட்டர்)

மனித உரிமை மசோதா தயாரிப்பு

ஜெனிவா, டிச. 1

மனித உரிமைபற்றிய ஐதேஸ்தாபனத்தின் 18 தேச கமிஷன நாளை மனித உரிமை மசோதாவை உருவாக்கும் வேலைகளை ஆரம்பிக்கும் எனத் தெரிகிறது.

இக் கமிஷனில் இந்தியா, பிரிட்டன் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ரஷ்யா ஸ்வீடன், பெல்ஜியம், பாரசீகம், ஈக்குவாடோ, பிரான்ஸ முதலிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன (ராய்ட்டர்)

காகித இறக்குமதியில் வெட்டு

சிங்கப்பூர், டிச 1

யுத்தத்திற்குமுன் இருந்ததிலும் பார்க்க அரைவாசி அளவிலேயே இன்று மலேயாவில் பத்திரிகைகள் நடந்து கொண்டிருக்கின்றன இறக்குமதி ஏற்றுமதி இலாகா பத்திரிகைகள் அடிக்கும் காகித இறக்குமதியை 25 வீதம் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

இதற்குக் காரணம் அங்குள்ள பொருளாதார நிலைமைகளே. புதிய புஸ்தகங்கள் வெளியிடுவதைக் குறைப்பதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும் எனவும் தெரிகிறது (ராய்ட்டர்)

லொறி மோதியது

ரக்வானை, டிச. 21

ரக்வானை போலிஸ் பகுதியைச் சேர்ந்த கொடக்காவலையில் கிரிமெனிக்கா என்னுமொருவர் பெர்னாண்டோ என்பவரால் செலுத்தப்பட்ட லொறி மோதியதால் அபாயகரமான காயமடைந்தார். லொறிச் சாரதி காயமடைந்த நபருடன் ரக்வானை போலிசில் சரணடைந்தார். போலிஸார் காயமடைந்தவரை ரக்வானை ஆஸ்பத்திரியில் அனுமதித்து மேற்கொண்டு விசாரணைகள் நடத்தி வருகின்றனர். (ந-நி)

டெலிபோன் தொழிற்சாலை

பம்பாயில் நிறுவப்படுகிறது

லக்னோ, டிச. 3

இந்தியாவெங்கும் டெலிபோன் வசதி ஏற்படுத்த இந்திய சர்க்கார் திட்டம் போட்டிருக்கிறார்கள். ஏராளமான டெலிபோன்களும்டெலிபோன் கருவிகளும் தேவையிருப்பதால் அவைகளை உற்பத்தி செய்ய பம்பாயில் ஒரு பெரிய தொழிற்சாலை ஏற்படுத்த சர்க்கார் ஒரு திட்டம் போட்டிருக்கிறார்கள். இதற்கு சர்க்காருக்கு 7 கோடி ரூபாய் செலவாகும். இப்பொழுது கல்கத்தாவில் ஒரு டெலிபோன் தொழிற்சாலை இருக்கிறது. பம்பாயில் டெலிபோன்கருவிகள் உற்பத்திசெய்யும் தொழிற்சாலை இருக்கிறது.

துரோகிக்கு மரண தண்டனை

நாங்கிங், டிச

ஜப்பானியருடன் ஒத்துழைத்து நாட்டைக் காட்டிக் கொடுத்ததாகத் தீர்ப்பளிக்கப்பட்ட இன் ஜுகெஸ் மீது இன்று மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இவர் ஜப்பானியரால் நிறுவப்பட்ட கமியூனிஸ்ட் எதிர்ப்புப் பொம்மை அரசாங்கத்தின் தலைவராக விளங்கியவர்.



கிங்ஸ்லியில் தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர்
நடனங்கள், செவிக்கினிய கீதங்கள்,
கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங் கவரும்
உயரிய நடிப்புகள் நிறைந்த

கன்னிகா

தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும் படம்
என் எஸ் கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம். எஸ். சரோஜினி,
எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் திறம்பட நடித்தது

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு

முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்

"இழந்த உறுதி"

என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்

புதிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

பீடிச் சக்கரவர்த்தி.

த.பி.
சொக்கலால்
ராம்சேட் பீடி
2 பீடிரிங்லேபில்

சொக்க லால்
ராம் சேட்
த.பி.சொக்கலால்

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் டிசம்பர் மாதம் 4-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின்ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.